கோதுமை மணியாகிய

# ஸ்தேவான்



எமது **25** வது வெளியீடு

திருமறை அறிஞர்
அ. கிறிஸ்டோபர்

# கோதுமை மணியாகிய
# ஸ்தேவான்

ஆசிரியர்
திருமறை அறிஞர்
**டாக்டர் அ. கிறிஸ்டோபர்**

வெளியிடுபவர்
**விண்ணக அப்பம்**
**நேரு வீதி, சூரம்பட்டி,**
**ஈரோடு – 9. தென்இந்தியா.**

RE-EDITION - July 2003
TOTAL COPIES - 2000
COPY RIGHT - TO AUTHOR
PRICE - Rs. 40.00 (IN INDIA)
BOOK NUMBER - T 25

**FOR DETAILS CONTACT**
**WINNAGA APPAM**
**No. 4/2, NEHRU STREET, SOORAMPATTI,**
**ERODE - 638 009. S.INDIA.**
**PHONE : (0424) 2271323 (Off)**
**Cell : 98430 - 24758**
**Fax : (0424) 2277286**
**e-mail : winnagaappam@rediff.com**

# அணிந்துரை

திருமறைப் பெரியார்
**யோபு ஞானப்பிரகாசம்**
தலைமைப் போதகர் & ஸ்தாபகர்
இந்தியன் பெந்தெகொஸ்தே அஸம்பிளீஸ்
கோவை–12. தென் இந்தியா.

எங்கள் உடன் ஊழியரும், பெரியார் மாவட்ட ஐ.பி.ஏ. சபைகளின் மத்திய போதகருமாகிய பாஸ்டர் அ. கிறிஸ்டோபர் அவர்களின் 25வது புத்தகமாகிய இந்த நூலுக்காக கர்த்தரைத் துதிக்கிறேன்.

திருமறையின் பல முக்கிய பகுதிகளைக் குறித்து மிகத் தெளிவாக நூல்களை எழுதியுள்ள இவர் புதிய ஏற்பாட்டின் முதல் இரத்த சாட்சியாகிய "ஸ்தேவானைக் குறித்தும், அவரது ஜீவியத்தின் மூலம் சபைக்கு காண்பிக்கப்பட்டுள்ள ஆவிக்குரிய பொறுப்புகளையும் மிகத் தெளிவாக எளிய நடையில் எழுதியுள்ளார்.

இந்தக் கடைசிக் கால சபையின்மேல் முன் மாரியையும், பின்மாரியையும் ஊற்றச் செய்து ஆயிரமாயிரமான "ஸ்தேவான்களைக்" கர்த்தர் எழுப்புவாராக. அதற்குக் தூண்டுகோலாய் இந்நூல் அமைய வாழ்த்துகிறேன், ஜெபிக்கிறேன்.

ஆமென்



# என்னுரை

என் இனிய வாசகர்களுக்கு,

அன்பரின் நாமத்தில் வாழ்த்துக்கள், இந்த 25வது நூலை வெள்ளி இதழாக உங்கள் கரங்களில் தவழச் செய்த தளகர்த்தர் இயேசுவிற்கு ஸ்தோத்திரங்களை ஏறெடுக்கிறேன்.

இரத்த சாட்சியாய் மரித்த விதத்தில் இவனொரு புதிய ஏற்பாட்டு ஆபேல், நியாயப் பிரமாணத்தை நிதானமாய்ப் பேசுவதில் இவன் இயேசுவின் நிழல், இப்படி எந்தக் கோணத்தில் பார்த்தாலும் புதுக்கிரணம் வீசும் ஸ்தேவானின் வாழ்க்கை புதிய ஏற்பாட்டு சபைக்கு ஒரு பொக்கிஷப் பெட்டகம்.

கடந்த நாட்களில் ஸ்தேவானின் வாழ்க்கையிலிருந்து கர்த்தர் பல மகிமையான காரியங்களை எனக்குக் கற்றுத் தந்தார். அவைகளை கோர்வைப்படுத்தி உங்களுக்கு ஜெபத்துடன் அளித்திருக்கிறேன்.

ஸ்தேவானைப் போன்ற வீரத்தை, விசுவாசத்தை, விவேகத்தை தேவன் உங்களுக்கு அருள்வாராக...

அன்போடும் ஜெபத்தோடும்
அவர் சேவையில்
பாஸ்டர் **அ.கிறிஸ்டோபர்**

# படைக்கிறேன்

முன்பு என்னை பேர்ச்சொல்லி அழைத்தாய்
பின்பு உலகைத் தோன்றச் செய்தாய்
என்பு வருமுன் உருவம் கண்டாய்
அன்பு கொண்டே தயவாய் அணைத்தாய்

வாய்மை உள்ள வாக்குகள் தந்தாய்
மகிமை நிறைந்த வரங்கள் அளித்தாய்
தூய்மை பொங்கும் ஊழியம் கொடுத்தாய்
வலிமை பெருகும் ஆவியால் நிறைத்தாய்

பதித்தாய் நாதா கண்ணை என்மேல்
எடுத்தாய் தேவா என்னை உமக்காய்
எழுத்தாய் எழுத தூது தந்தாய்
கருத்தாய் படைக்கிறேன் ஆசீர் அருள்வாய்

பாஸ்டர் **அ.கிறிஸ்டோபர்**



# பொருளடக்கம்


1. அஸ்தமனத்தில் ஓர் உதயம்
2. ஆதிச்சபையின் அரசாங்கம்
3. ஆச்சரியமான அழைப்பு
4. ஆவியில் நிறைந்த ஸ்தேவான்
5. ஆகமங்களில் தேறின ஸ்தேவான்
6. அற்புத வித்தாகிய ஸ்தேவான்

# 1

# அஸ்தமனத்தில் ஓர் உதயம்

என் இனிய வாசகர்களுக்கு,

இரட்சகரின் நாமத்தில் இனிய வாழ்த்துக்கள். இந்த இருபத்தைந்தாவது நூலை வெள்ளி இதழாக உங்களுக்கு அளிப்பதில் இரட்சகர் இயேசுவுக்குள் என் இதயம் களிகூறுகிறது.

கோதுமையானது தனித்திருந்தால் பலன் தராது. நிலத்தில் விழுந்து செத்ததேயாகில் மிகுந்த பலனைத் தரும் என்று நமது ஆண்டவர் மொழிந்துள்ளார். அந்த வார்த்தையின்படி வளமான கோதுமை மணிகள் தோன்றுவதற்கு காரணமாய் தான் செத்த பின்னும் வாழ்ந்து கொண்டிருக்கும் முக்கியமான நபர் ஒருவரைக் குறித்து இந்த நூலில் எழுதிட விரும்புகிறேன்.

ஒரு திங்கட்கிழமை இரவு 11:55க்கு எனது வீட்டில் உட்கார்ந்து வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்த எனக்கு கவனம் வேறு பக்கமாய் திரும்பினது. எனது அறையின் ஒரு ஓரத்தில் இருந்த எலக்ட்ரானிக் கடிகாரத்தின் மேல் என் கவனம் வழக்கத்திற்கு மாறாகப் பதிந்து விட்டது.

நிமிடத்திற்கு நிமிடம் எண்கள் மாறிக்கொண்டே இருக்கும் அந்தக் கடிகாரத்தை 11:59 வரை கவனித்துக்கொண்டே வந்தேன். அதற்கு அடுத்த நிமிடம் ஏற்பட்ட ஒரு விந்தை எனது சிந்தையை வெகுவாகப் பாதித்தது. சில நொடிகளில் அந்தக் கடிகாரத்தில் அனைத்து எண்களும் 00:00 என்று எல்லாம் பூஜ்ஜியங்களாக



மாறிவிட்டன.

ஐயகோ! திங்கட்கிழமை முடிந்துவிட்டதே என அங்கலாய்த்தேன். ஆனால், என் உள்மனமோ, அப்படியல்ல! செவ்வாய்க்கிழமை பிறந்துவிட்டது. ஆண்டவரைத் துதி என்று எனக்குச் சொல்லிற்று. ஆம், அந்த டிஜிடல் கடிகாரம் காட்டிய 00:00 திங்கட்கிழமை முடிந்து விட்டது என்று குறிப்பாக உணர்த்தாமல், செவ்வாய்க்கிழமை பிறந்து விட்டது என்று குறிப்பிட்டு உணர்த்துகிறது என்பது தான் உண்மை.

திங்கட்கிழமையின் அஸ்தமனம் செவ்வாய்க் கிழமையின் உதயமாய் அமைந்தது. இந்த விந்தையை தனது வாழ்வில் அனுபவமாகக் கொண்ட மனிதரைத்தான் உங்களுக்கு இந்த நூலில் அறிமுகம் செய்யப் போகிறேன்.

மடிந்து போனான் என்று மற்றவர்கள் மகிழ்ந்தார்கள். ஆனால், இவன் இறந்தபின்பும் இவனது இரத்தத்துளிகள் இலக்கமற்றவர்களை இரட்சிப்புக்குள் நடத்தியது என்பது மிகப்பெரிய ஆச்சரியம்.

பல ஆண்டுகளுக்கு முன்பாக, நான் ஒரு திருச்சபைக்குச் சென்றிருந்தேன். அங்கே பாடின பல பாடல்களில் ஒரு பாடலின் ஒரு சரணம் என்னை வெகுவாய்ப் பாதித்தது.

''கயவரின் கையில் சிக்குண்டாலும்
கண்டம் துண்டமாக வெட்டுண்டாலும்
வெண்டுண்ட ஒவ்வொரு துண்டங்களும்
வெற்றியுடன் அல்லேலூயா பாடிடுமே''

இந்தக் கவியைக் கேட்டவுடன் என் உடல் சிலிர்க்க ஆரம்பித்து விட்டது.

ஆண்டவருக்காக வாழ்வதும், ஆண்டவருக்காக வீழ்வதும், வீழ்ந்தபின்பும் வாழ்த்துவேன் என்பதும் எத்துணை

பெரிய நம்பிக்கை தெரியுமா?! அப்படி மரணத்தை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டு, மடியும் தருவாயிலும் மன்னவன் முகத்தைத் தரிசித்த ஒரு விந்தை மனிதனைக் குறித்து இந்த நூலில் எழுதப் போகிறேன்.

எத்தனையோ புத்தகங்களை நான் எழுதியிருந்தாலும் இந்தப் புத்தகத்தை நான் எழுதத் துவங்கிய போது சிறிது தயக்கம் அடைந்தேன். என்னையும் அறியாமல் ஒரு நடுக்கம் தோன்றிற்று. அப்பப்பா! எப்பேர்ப்பட்ட ஒரு புனிதரை ஒரு புதிய ஏற்பாட்டின் போர்வாளை குறித்து எழுதுகிறோமே! என்ற பிரமிப்பு எனக்குள் விஞ்சி நின்றது.

காரணம், இவன் ஒரு தனி மனிதன் அல்ல. வேதப் புத்தகத்தில் சொல்லப்பட்ட அநேகம் பரிசுத்தவான்களுக்கு பேச்சில், நடக்கையில், மரணத்தில் நிழலாய் முன் உதாரணமாய், சாட்சியாய் வாழ்ந்த ஒரு அரியப் பெட்டகம்.

புதிய ஏற்பாட்டு சபையின் சரித்திரத்தில் முதல் இரத்தச் சாட்சியாக இவன் மரித்ததினால், பழைய ஏற்பாட்டு வரலாற்றில் முதல் இரத்த சாட்சியாய் மரித்த ஆபேலை இவன் நமக்கு நினைப்பூட்டுகிறான்.

நியாயப்பிரமாணத்தையும், எபிரெயரின் வரலாற்றையும் தெளிவாகப் பேசினபடியினாலும் இவன் முகம் தேவ தூதனுடைய முகத்தைப் போல பிரகாசித்தபடியினாலும், பழைய ஏற்பாட்டில் எபிரெய வரலாற்றைத் தொகுத்து கூறியவனும் தனது முகத்தில் பிரகாசத்தைப் பெற்றிருந்தவனுமாகிய மோசேயை இவன் நமக்கு நினைப்பூட்டுகிறான்.

மரணத் தருவாயில், ''இவர்களை மன்னியும்'' என்று மன்றாடியதிலும், ''என் ஆவியை ஏற்றுக் கொள்ளும்'' என்ற காரியத்திலும் சிலுவையில் இயேசு நடப்பித்த கிரியைகளை பேசின வார்த்தைகளை இவனது மரணம் நமக்கு நினைப்பூட்டுகிறது.

அப்போஸ்தலர் ஆறாம் அதிகாரம் ஐந்தாம் வசனத்தில்



அறிமுகமாகி, எட்டாம் அதிகாரம் இரண்டாம் வசனத்தில் அடக்கத்திற்குள்ளாகியிருக்கும் இவனது வாழ்க்கையைக் குறித்து வேதப் புஸ்தகத்தில் வாசித்த போது எனது இரத்தத்தில் இளஞ்சூடு ஏறுவதை உணர்ந்தேன்.

இவனுக்குப் பெயர் வைத்த போது, எதற்காக இப்படி பெயர் வைத்தார்கள் என்று தெரியவில்லை. வேதத்தில் வருகிற பெயர்களெல்லாம் அர்த்தமுள்ளவைகளாகவும், காரணப் பெயர்களாகவும் இருக்கின்றன என்பதை நீங்கள் அறிவீர்கள்.

அப்போஸ்தலனாகிய பவுலைப் பிரசவித்தது, இறக்கும் தருவாயில் இவன் விடுத்த விண்ணப்பமும், சிந்திய இரத்தத் துளிகளுமே என்று நான் நம்புகிறேன்.

**''கிரீடம்''**என்ற பொருள் உள்ள, பெயர் அமைந்த இந்த ''ஸ்தேவான்'' உண்மையிலேயே விலை மதிப்புள்ள கிரீடம் தான், இவரைக் குறித்து இனிவரும் அதிகாரங்களில் வாசிக்க – யோசிக்க தேவன் நமக்கு அநுக்கிரகம் செய்வாராக.

# 2

# ஆதிச் சபையின் அரசாங்கம்

புதிய ஏற்பாட்டிலுள்ள மற்ற ஆகமங்களை விட அப்போஸ்தலருடைய நடபடிகள் சற்று வித்தியாசமானது. ஆரம்பகால சபையின் வளர்ச்சி வரலாற்றை வரிசைப்படுத்திக் கூறும் அரியப் பொக்கிஷமாய் அஃது இருக்கிறது. சுவிசேஷங்கள், இயேசு கிறிஸ்துவின் உலக ஊழியத்தையும், உயிர்த்தெழுதலையும் நமக்குத் தெரிவிக்கிறது. அப்போஸ்தலருடைய நடபடிகளோ இயேசுவின் உயிர்த்தெழுதலையும், உயிர்த்தெழுந்த இயேசு பரலோகத்திற்கு போகும் முன்பு இந்த உலகத்தில் செய்த ஊழியத்தையும் நமக்கு ஆரம்ப அதிகாரங்களிலேயே அழகாய் விவரிக்கிறது.

நற்செய்தி நூல்கள் இயேசு கிறிஸ்துவின் உலக ஊழியங்களை நமக்கு விவரிக்கிறது போலவே அப்போஸ்தலருடைய நடபடிகள் பரிசுத்த ஆவியானவரின் பணிகளை நமக்குத் தெளிவாய்ச் சொல்லுகிறது.

அப்போஸ்தலருடைய நடபடிகள் இல்லாவிட்டால், கண்ணைக் கட்டி காட்டில் விட்டாற்போல் சங்கட நிலை நமக்கு ஏற்பட்டிருக்கும். அதனால், இப்போது இருப்பதை விட பல ஆயிரக்கணக்கான நூதன உபதேசங்கள் சபையை அலைக் கழித்திருக்கும்.

பரிசுத்த ஆவியானவர் அதிகக் கரிசனையோடு நமக்கு அருளிய அப்போஸ்தலருடைய நடபடிகளுக்காய் என் தேவனைத் துதிக்கிறேன். ஆகையினால் தான் இன்று நாம் தப்பித்து, தப்பாத வழி நடந்து தற்பரனுக்குள் வளருகிறோம்.



இந்த அப்போஸ்தலருடைய நடபடிகள் ஆறாம் அதிகாரத்தில்தான் ஸ்தேவான் அறிமுகப்படுத்தப்படுகிறார். சபைக்கு முன்பு கொண்டு வரப்பட்டு பொறுப்புகள் அவருக்கு அளிக்கப்படுகிறது. திருமறையில் ஏறக்குறைய எழுபது வசனங்களில் விவரிக்கப்பட்ட இவரோடு தொடர்பு உள்ள சம்பவங்களை நமது தியானத்திற்காக எடுத்துக் கொண்டு, நலமானவைகளை – நமக்கு அவசியமானவைகளை சிந்திக்கப் போகிறோம்.

‘‘ஸ்தேவனுடைய வீட்டாருக்கும் நான் ஞானஸ்நானம் கொடுத்ததுண்டு’’ என்று 1 கொரி 1 : 16ல் பவுல் குறிப்பிடுகிற ஸ்தேவானும், கோதுமை மணியாகிய ஸ்தேவானும் ஒரே நபர் அல்ல, இந்த ஸ்தேவான் பவுலின் ஊழியத்தின் மூலம் இரட்சிக்கப்பட்டவன் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். (1கொரி 16 : 15)

இப்போது மீண்டும் அப்போஸ்தலருடைய நடபடிகளைக் கவனித்துப் பாருங்கள். நற்செய்தி நூல்கள் இயேசுவின் ஊழியத்தை விவரிப்பதின் பாங்கைப் போலவே, அப்போஸ்தலருடைய நடபடிகள் சீஷர்களின் ஊழியத்தை விவரமாக தெரிவிக்கிறது.

முதல் அதிகாரத்தில் சபையைக் குறித்த முகவுரைகள்,
இரண்டாம் அதிகாரத்தில் சபையின் ஆரம்ப விழா,
மூன்றாம் அதிகாரத்தில் சபையின் சாட்சி,
நான்காம் அதிகாரத்தில் சபையின் எழுச்சி,
ஐந்தாம் அதிகாரத்தில் சபையின் வளர்ச்சி
என்று கிரமமாக எழுதப்பட்டுள்ளது.

ஆனால், ஆறாம் அதிகாரத்தின் ஆரம்பத்தைப் பாருங்கள்! எழுச்சி – வளர்ச்சி என்று எழுதாமல், சபையில் ஏற்பட்ட கிளர்ச்சியினைக் குறித்து எழுதப்பட்டுள்ளது. முன்னோட்டமாக சில காரியங்களை கவனித்து விட்டு, பின்னர்தான் நாம் ஸ்தேவானைக் குறித்துப் பார்க்க

வேண்டும்.

**சபை பெருகின போது,** என்ற வார்த்தையுடன் தொடங்குகிற வசனம் எப்படி வேதனையோடு முடிகிறது என்று பாருங்கள்! கிரேக்கர் **எபிரேயருக்கு விரோதமாக முறுமுறுத்தார்கள் (அப். 6 : 1)**

ஆக, சபை பெருக ஆரம்பிக்கும் போது, பிரச்சனைகள் வரத்தான் செய்யும் – வளரத்தான் செய்யும், இது நேற்றோ, இன்றோ உண்டான புதுமையான காரியமல்ல, பத்தொன்பது நூற்றாண்டுகளைக் கண்டுவிட்ட பழமையான அப்போஸ்தலர் காலத்தின் காரியம் என்பதனை மனதில் கொள்ள வேண்டும்.

அன்பான ஊழியரே! உங்கள் சபையில் பிரச்சனை வருகிறதா? கவலையை விடுங்கள். உங்கள் சபை பெருக ஆரம்பித்து விட்டது என்பது அர்த்தம். வீணாக மனதைக் குழப்பிக் கொள்ளாதீர்கள்.

என் சபையில் இதுவரை பிரச்சனையே கிடையாது என்று எந்த ஊழியராலும் சொல்ல முடியாது. அப்படி யாராவது சொன்னால், அந்தக் கூட்டத்தை கர்த்தர் இன்னும் சபையாக அங்கீகரிக்கவில்லை என்று தான் பொருளாகும்.

பரிசுத்தவான்களின் சபை என்று சொல்லப்பட்டாலும் அங்கே இருப்பவர்கள் யார்? எதற்காக கூட்டிச் சேர்க்கப்பட்டு இருக்கிறார்கள் என்பதை முதற்கண் அறிந்திடல் வேண்டும்.

பரிசுத்தவான்கள் **சீர்பொருந்தும் பொருட்டு** (எபே 4 : 12) சபையை தேவன் ஏற்படுத்தியுள்ளார். ஆகவே, சீர்பொருந்த வேண்டியவர்களைக் கொண்ட சபையில், பிரச்சனைகள் இயல்பாகவே வரத்தான் செய்யும். ஆனால் அஃதினை அப்போஸ்தலர்களைப்போலவே நாமும் ஞானமாய்த் தீர்க்க வேண்டும்.

எந்தக் காரியத்திற்கும் ஒரே விதமான அணுகுமுறையை அல்லது அளவுகோலை ஊழியர்கள்



பயன்படுத்தக்கூடாது. ஐந்தாம் அதிகாரத்தில் அனனியா, சப்பீராளுக்கு நியாயத்தீர்ப்புக் கொடுத்த அப்போஸ்தலர்கள் ஆறாம் அதிகாரத்தில் அதே அணுகுமுறையைக் கையாண்டு இருந்தால், ஆட்களை மட்டுமல்ல ஆதிச் சபையையே அடக்கம் செய்திருக்க வேண்டிய ஆபத்தான நிலைமை ஏற்பட்டிருக்க வேண்டும்.

ஐந்தாம் அதிகாரத்தில் இறுக்கமாயிருந்தவர்கள், ஆறாம் அதிகாரத்தில் இணக்கமாய் வந்து, பிரச்சனைகளைத் தீர்த்து வைத்தார்கள். ஆகவே, பாவம் செய்தவர்களைத் தண்டிக்க வேண்டும். தவறு செய்தவர்களைக் கண்டிக்க வேண்டுமே தவிர, தண்டிக்க கூடாது.

அப்போஸ்தலர்களின் இப்பேர்ப்பட்ட திவ்வியமான கிரியையினால் முறுமுறுத்த சபையானது, முற்றிலும் மாறுபட்டது. சீஷர்களின் தொகை எருசலேமில் மிகவும் பெருகிற்று. (அப். 6 : 7).

விசுவாச மக்களுக்கு சில காரியங்களைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இன்றைக்கு அநேகர் என்ன நினைக்கிறார்கள் தெரியுமா? சபை பெருகி விட்டது. எனவே சபைக்கும் போதகருக்கும் வருவாய் இத்தனை மடங்கு பெருகியிருக்கும் என்பதுதான். இந்த நினைப்பு ஒரு விதத்தில் உண்மையானாலும் சபை பெருகப் பெருக ஊழியர்கள் அதிகமதிகமான பிரச்சனைகளைச் சந்திக்கிறார்கள். அதனால், மனநிலை உட்பட உடல்நிலையும் அவர்களுக்கு பாதிக்கப்படுகிறது என்பதுதான் உண்மையிலும் உண்மை.

எனவே, உங்கள் சபை வளர வளர உங்கள் ஊழியருக்காக அதிகம் ஜெபிக்க நீங்கள் கடமைப்பட்டு இருக்கிறீர்கள். அவரும் மாம்ச சரீரத்தை உடையவர் தானே! எத்தனை காரியங்களைத் தாங்குவார்? எத்தனை இடங்களுக்கு ஓடுவார்? சபை, ஊழியரைக் குறித்த தரிசனம்

பெறவில்லை என்றால் அந்த சபை வளர்ச்சியடைந்தும் பயன் ஒன்றுமில்லை. அதன் பெருக்கத்தை வளர்ச்சி என்று சொல்வதைப் பார்க்கிலும் ஊது காமாலை நோய் என்று சொல்லுவதுதான் மிகச் சரியாக இருக்கும்.

ஆதிச் சபையின் பிரச்சனையைப் பாருங்கள்! **கிரேக்கர்கள் எபிரெயருக்கு விரோதமாய் முறுமுறுத்தார்கள்.** இது இரண்டு விதமான ஜனங்களல்ல. கிரேக்கர் என்பது புறஜாதிகளையும், எபிரெயர் என்பது யூதஜாதியையும் குறிக்கும் என நீங்கள் தவறாக கருதிவிடக்கூடாது. சிலர் அப்படி தவறாகப் பிரசங்கிப்பதையும் கேட்டிருக்கிறேன்.

இது எருசலேமில் உள்ள தலைமை சபையில் ஏற்பட்ட ஒரு பிரச்சனை. அங்கே அப்போது யூதர்களைத் தவிர வேறு எவரும் சீஷர்களாய் ஆகவில்லை. அப்போஸ்தலர் பத்தாம் அதிகாரத்தில் தான் புற ஜாதிகளின் சபைக்கு வித்திடப்பட்டதாக எழுதப்பட்டுள்ளது. அப்படியானால், யார் இந்த கிரேக்கர்கள்? யார் இந்த யூதர்கள்? என்பதற்கு விடை காணுதல் அவசியம் அல்லவா?

இந்த இரண்டு குழுக்களும் இரட்சிக்கப்பட்டு, ஒரே சபையில் விசுவாசிகளாக இருந்தவர்கள். மாம்சத்தின்படி இந்த இரண்டு கூட்டமும் யூத இனத்தைச் சார்ந்தவர்களே. அப்படியானால், கிரேக்கர், எபிரெயர் என்ற பிரிவு எதன் அடிப்படையில் வந்தது என நீங்கள் கேட்கலாம்.

**பலஸ்தீனா பகுதியில் இருந்து எபிரெய மொழியைப் பேசியவர்கள் எபிரெயர் என்றும், கிரேக்க – ரோம சாம்ராஜ்ய எல்லைகளில் சிதறி கிரேக்க மொழி பேசியவர்கள் கிரேக்கர் என்றும் ஆதி சபையில் அழைக்கப்பட்டனர்.**

ஆக, ஆதிச்சபையில் மொழியின் அடிப்படையில், அவர்கள் வாழ்ந்த, வந்த பட்டிணங்களின் அடிப்படையில் பிரிவினை பிரச்சனை தோன்றியது. சபை பத்தொன்பது



நூற்றாண்டுகள் பல நிலைகளைக் கடந்து வந்தாலும் மொழி, நிறம், ஜாதி ஆகியவைகள் மட்டும் மாறவும் இல்லை. மறையவும் இல்லை.

குறிப்பிட்ட மொழி பேசுவோருக்கு ஒரு சபை. குறிப்பிட்ட இடத்திலிருந்து வந்தவர்களுக்கு ஒரு சபை. குறிப்பிட்ட சாதிக்கு ஒரு சபை என இன்று பலர் பங்கு போட்டுக்கொள்வது சாத்தானின் ஆழமே அல்லாமல் வேறொன்றுமில்லை என்று அழுத்தமாக உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

அன்று இந்தப் பிரச்சனைக்கு அப்போஸ்தலர்களின் ''பளிச்'' ''பளிச்'' பதிலைக் கவனித்துப் பாருங்கள்!

**நாங்கள்** தேவ வசனத்தைப் போதியாமல் பந்தி விசாரணை செய்வது தகுதியல்ல. ஆதலால் சகோதரரே.... அவர்களை இந்த வேலைக்கு **ஏற்படுத்துவோம்.**

**நாங்களோ** ஜெபம் பண்ணுவதிலும் தேவ வசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும் இடைவிடாமல் **தரித்திருப்போம்** என்றார்கள். இங்கே மூன்று காரியங்களை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**1. ஐக்கியம்**

அப்போஸ்தலர்கள் பன்னிருவரும் ஒரே மனதுடனும் ஒரே ஐக்கியத்துடனும் இருந்ததால், அவர்களுக்குள் குழுத்தன்மை இருந்தது. இவர்களின் இந்த ஆவியின் ஒருமைப்பாட்டை நடபடிகள் இரண்டாம் அதிகாரத்திலேயே நாம் காணமுடியும். ''அப்பொழுது பேதுரு பதினொருவரோடுங்கூட எழுந்து நின்று, அவர்களை நோக்கிப் பிரசங்கித்தான்''.

அப்போஸ்தலர்களுடைய காலத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் ஞானஸ்நானம் பெற்றதற்குக் காரணம் அவர்களுக்குள்ளே நிலவிய அசைக்க முடியாத ஆழமான ஐக்கியம் தான். எனவே, சபை வளர்ச்சிக்கு

அமைப்பு முறையும், தலைமைத்துவமும் அவசியம் என்பதை இதன் மூலம் அறிந்து கொள்ளுங்கள். (CHURCH GROWTH DEMANDS ORGANISATION AND DELIGATION).

இப்படியிருக்க சபைக்கு ஒரு அமைப்பு (ORGANISATION) தேவை. அத்துடன் ஒரு ஐக்கியம் (FELLOW SHIP) தேவை. வசதிப்படுமானால், கூட்டு ஊழியமாக (TEAM MINISTRY) செய்வது சாலச் சிறந்தது. ஊழியர்கள் தனித்து நின்று ஊழியம் செய்ய முனைவதும், தானே எல்லாவற்றையும் செய்ய முற்படுவதும் நிச்சயமாக தவிர்க்கப்பட வேண்டிய காரியங்களாகும்.

## 2. தகுதியானவைகளைச் செய்தல்

அப்போஸ்தலர்களின் தெளிவைப் பாருங்கள்! **பந்தி விசாரணை செய்வது தகுதியல்ல** என்று சரியான பதிலை எந்தவித முகதாட்சணியமுமின்றி "சுருக்" கென்று சொல்லி விட்டார்கள். பந்தி விசாரிப்பு என்பது தகுதியற்ற வேலை என்று நீங்கள் பொருள்படுத்தக் கூடாது. ஆனால், **வசனத்தைப் போதியாமல்** பந்திவிசாரிப்பு செய்வது தான் தகுதியற்ற செயல் என்பது அப்போஸ்தலர்களின் விளக்கம்.

மேய்ப்பர்களே! போதகர்களே! நமக்கு எது தகுதி எது தகுதியல்ல என்பதைச் சரியாக அறிந்திருத்தல் வேண்டும். யாராவது வந்து என் சபையில் பிரசங்கிக்கட்டும் என்று யாரையாவது பேச வைத்து விட்டு நீங்கள் வேறு அலுவல்களைக் கவனிப்பது உங்களுக்குத் தகுதியானது அல்ல.

வேறு சபைக்குப் போகும் விசுவாசிகளை பல்லைக்காட்டி "பிரதர் எங்க சபைக்கு இந்த வாரம் வந்து பிரசங்கியுங்கள்" என்று அழைத்து தனது பொறுப்பைத் தட்டிக் கழித்து தகுதியில்லாத ஊழியரைக் குறித்து வேதனைப்படுகிறேன் – வெட்கப்படுகிறேன்.

"நாங்களோ ஜெபம் பண்ணுவதிலும், **தேவ வசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும்** இடைவிடாமல்



தரித்திருப்போம்" என்று அப்போஸ்தலர்கள் சொன்னதை சற்று மனதில் வையுங்கள். ஆறு நாட்கள் வேலை செய்து விட்டு வாரத்தில் ஒருநாள் மட்டும் போதகரின் போதகத்தைக் கேட்க மக்கள் வாஞ்சையோடு ஓடி வருகிறார்கள். அந்த ஒருநாள் கூட உங்கள் மந்தைக்கு தேவ வசனத்தைப் போதிக்க உங்களால் முடியவில்லை என்றால் உங்களுக்கு சபைப் பொறுப்பே அவசியம் இல்லை என்று அடக்கத்துடன் சொல்லிக்கொள்கிறேன். ஜெபத்திலும், போதிப்பதிலும் போதகர்கள் அப்போஸ்தலர்களைப் போல தரித்திருப்பது மிகவும் அவசியம்.

## 3. பொறுப்பாளர்களை ஏற்படுத்துதல்

அப்போஸ்தலர்கள் செய்த அடுத்த காரியத்தைப் பாருங்கள்! **பந்தி விசாரிப்புக்கென்று ஆட்களை ஏற்படுத்தினார்கள்.** இந்தக் காரியத்திலேயும் அவர்கள் சாதுரியத்தோடும், ஞானத்தோடும் செயலாற்றியது குறிப்பிடத்தக்க ஒன்று.

தேவனுடைய சபைக்கடுத்த காரியத்தில் **எந்த வேலையானாலும்** அந்தப் பொறுப்பிற்கு நாம் நியமிக்கப்போகும் ஆட்களை சற்றே நிதானித்து அறிதல் வேண்டும். படிப்பு – பணம் இவைகளை அளவுகோலாக பயன்படுத்தக்கூடாது.

பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெறாத நபரை எக்காரணத்தைக் கொண்டும் பொறுப்பில் அமர்த்தாமலிருப்பதே நலம். பந்தி விசாரிப்பு வேலைக்குக் கூட பரிசுத்த ஆவியின் அபிஷேகம் தான் முதலாவது தகுதி என்று அப்போஸ்தலர் ஆறாம் அதிகாரம் மூன்றாம் வசனம் வெளிப்படையாகத் தெரிவிக்கிறது.

ஊழியர்கள் சில வேளைகளில் தம்மையும் அறியாமல் தவறுதலாய் சிலரைப் பொறுப்பில் அமர்த்தி விடுகிறார்கள். அதனால் மக்கள் மத்தியில் அதிருப்தி ஏற்பட்டு முறுமுறுப்பு முற்ற ஆரம்பிக்கிறது. இப்படிப்பட்ட காரியங்களை எப்படித்

தவிர்க்க வேண்டும் என்பதற்கு அப்போஸ்தலர்களின் செயல்கள் நமக்கு நல்ல ஒரு வழிகாட்டியாக இருக்கின்றது.

அப்போஸ்தலர்கள் தாமாகவே ஆட்களைத் தெரிந்தெடுக்காமல் **“உங்களில் தெரிந்து கொள்ளுங்கள்”** (அப் 6:3) என்று சபையாரிடம் பொறுப்பைக் கொடுத்து விட்டார்கள். அவர்கள் ஆட்களைத் தெரிந்தெடுத்து அப்போஸ்தலர்களிடம் கொண்டு வந்தார்கள். (அப் 6:6) பிரச்சனை முடிந்தது (நோ ப்ராப்ளம்)

அங்கே சபையார் உதவிக்காரர்களை (DEACON) (டீக்கன்) **தெரிந்தெடுத்தார்கள்.** உதவிக்காரர்கள் பந்தி **விசாரித்தார்கள்.** அப்போஸ்தலர்கள் **போதித்தார்கள்.** இதில் சபையார் என்கிற பொதுக்குழு (GENERAL BODY) உதவிக்காரர்கள் என்கிற செயற்குழு (ACTING BODY) அப்போஸ்தலர்கள் என்கிற தலைமைக்குழு (SUPREME BODY) போன்ற கிரமமான ஒழுங்குமுறையை நீங்கள் காண முடிகிறதல்லவா?

யாருக்கு எந்தப் பொறுப்பைக் கொடுத்தாலும், அவர்களை சபையின் முன் நிறுத்தி, தங்கள் கைகளை அவர்கள் மேல் வைத்து ஜெபித்து அப்போஸ்தலர்கள் அங்கீகாரம் வழங்கினார்கள். இஃது இரண்டு விதங்களில் முக்கியம் வாய்ந்த காரியமாய் இருக்கிறது.

முதலாவதாக, நம்மை அப்போஸ்தலரும், சபையாரும் அங்கீகரித்துள்ளார்கள் என்கிற திட நம்பிக்கையும், பொறுப்புணர்வும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு ஏற்படுகிறது. இரண்டாவதாக, சாட்சியில்லாத நபர்கள் தான் தோன்றித்தனமாய் எழும்பி, தப்பிதங்கள் செய்வதை தவிர்க்க ஏதுவாய் இருக்கிறது.

கைகளை மேல் வைத்து ஜெபிப்பது, அங்கீகரிப்பது என்பது அப்போஸ்தலர்கள் நடப்பித்துக் காண்பித்த முன்மாதிரியாகும். அதை இன்றைய திருச்சபை கடைப்பிடிப்பது நல்லது – அவசியமும் கூட.



1. உதவிக்காரர்கள் மீது கைகளை வைத்து ஏற்படுத்தினார்கள் (அப் 6:6)

2. பவுலையும், பர்னபாவையும் கைகளை வைத்து (மிஷனெரி) ஊழியத்திற்கு வேறு பிரித்தார்கள் (அப் 13:3)

3. தீமோத்தேயுவை ஊழியத்திற்கு (கண்காணிப்பு) ஏற்படுத்தின போது மூப்பர் சங்கத்தார் அவன் மேல் கைகளை வைத்தார்கள். (I தீமோ 4:13)

இப்படி பல மேற்கோள்களை கைகளை வைத்து அங்கீகரிப்பதற்கு மேற்கோள்களாக வேதத்திலிருந்து காண்பிக்க முடியும்.

ஆதிச் சபையின் இந்த ஒழுங்கினிமித்தம் சிறந்ததொரு கட்டுப்பாடும், ஒழுங்குமுறையும் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

சபையார் ஆட்களைத் தேர்ந்தெடுத்தார்கள். ஆனால், அப்போஸ்தலர்கள் அவர்களை ஏற்படுத்தினார்கள். எனவே, சபையின் உச்சக்கட்ட அதிகார அமைப்பு சபையின் அங்கத்தினர்கள் அல்ல, ஊழியர்களே என்பது குறிப்பிடத்தக்கது. அந்த நிலை எங்கு உள்ளதோ அந்த இடத்தில் மூளைக்குக் (BRAIN) கட்டுப்பட்டு செயல்புரியும் சரீரத்தைப் (BODY) போல சபை சொஸ்தமாயிருக்கும்.

**சபை வளர்ச்சிக்கான இரகசியத்தை அப்போஸ்தலர்கள் சரியாக அறிந்திருந்தார்கள். ஐந்தாம் அதிகாரத்தில் இரண்டு பேரை அப்புறப்படுத்தினார்கள். ஆறாம் அதிகாரத்தில் ஏழுபேரை ஏற்படுத்தினார்கள்.** பொறுப்புகளை பகிர்ந்து அளிப்பதினால் சபைகளில் குழப்பங்கள் வரும் என்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. எதை, எவரிடம், எப்படி பகிர்ந்து கொடுக்கிறோம் என்பதை வைத்துதான் எதிர்வினைகள் அமைகிறது.

அப்போஸ்தலர்கள் உதவிக்காரர்களை ஏற்படுத்தியவுடன் மூன்று முக்கிய காரியங்கள் அங்கு

நடைபெற்றதாக அதே அதிகாரத்தில் ஆவியானவர் மிகத் தெளிவாய் எழுதி வைத்திருக்கிறார்.

1. தேவ வசனம் விருத்தியடைந்தது.

2. சீஷர்களுடைய தொகை எருசலேமில் பெருகிற்று.

3. ஆசாரியர்களில் அநேகர் விசுவாசத்திற்கு கீழ்ப்படிந்தார்கள். உதவிக்காரர்களை ஏற்படுத்திய பின்பு சபைக்குக் கிட்டிய இந்த சீரிய வளர்ச்சியை சிந்திக்க மறந்து விடாதீர்கள்.

வசனம் பரவ வேண்டுமா? உள்ளூர் சபையில் ஆத்துமாக்கள் பெருக வேண்டுமா? எதிர்ப்போரும் விசுவாசத்திற்குள் வர வேண்டுமா? நீங்கள் உடனே ஒன்று செய்யுங்கள். சபைக்கடுத்த காரியங்களைக் கவனிக்க இரண்டாம் கட்ட தலைவர்களை ஏற்படுத்துங்கள். அது போதும்.

“டீக்கன்”(DEACON) என்று ஆங்கிலத்தில் குறிக்கப்பட்டுள்ள இந்த உத்தியோகத்திற்கு ஆரம்பத்தில் வேலைக்காரன் (SERVANT) என்ற பொருள் மட்டுமே இருந்தது. இந்த ஏழுபேர்களை சபையானது வேலைக்காரர்களாகவே நியமித்தது என்பது குறிப்பிடத்தக்கது. (**இந்த வேலைக்காக** அவர்களை ஏற்படுத்துவோம். (அப் 6:3)

ஆனால், இந்த டீக்கன் என்ற உத்தியோகம் நாளடைவில் வித்தியாசப்பட்டு 1. தீமோ 3:8 ல் சொல்லப்பட்ட உதவிக்கார ஊழியமாக (கண்காணியின் உதவிக்காரர்கள்) உயர்ந்து விட்டது.

இந்த டீக்கன் என்ற பெயரை நாம் நடைமுறையில் தமிழில் “மூப்பர்” என்று மொழி பெயர்த்துச் சொல்கிறோம். ஆனால், தமிழ் வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ள மூப்பருக்கும், நாம் தற்போது பயன்படுத்துகிற “மூப்பர்” என்கிற வார்த்தைக்கும் வித்தியாசம் உண்டு. இரண்டும்



இரண்டு விதமான உத்தியோகங்களைக் குறிக்கிறது.

**மூப்பர்** என்று தமிழ் வேதாகமத்தில் எழுதப்பட்டுள்ள வார்த்தைக்கு கிரேக்க மொழியில் ‘பிரஸ்புயூட்டராஸ்’ என்று பெயர். இந்த வார்த்தை புதிய ஏற்பாட்டில் அத்தியட்சர் கண்காணி என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. எனவே, இது ஊழியர்களையே குறிக்கிறது.

பேதுருவும், “உங்களிலுள்ள மூப்பருக்கு உடன் மூப்பர்” என்று 1 பேதுரு 5:1 ல் எழுதியிருக்கிறார். பவுல், தான் இறுதியாக எருசலேமுக்கு வரும்போது மூப்பர்களிடம் (அப்போஸ்தலர்களிடம்) போவதாக அப் 21:17ல் எழுதியிருக்கிறார். அப்படியே பவுல் எபேசு சபையின் மூப்பரை சபையை மேய்க்க அறிவுறுத்தினார். எனவே, இவ்வசனங்கள் மூலம் **மூப்பர்** என்று வேதத்தில் எழுதப்பட்டுள்ள வார்த்தை ஊழியர்களையே குறிக்கும் என்பதை அறியுங்கள்.

வேதத்தில் சொல்லப்பட்ட மூப்பர்களை ஆங்கில வேதாகமத்தில் எல்டர் (ELDER) என்றும், நாம் சபையில் இப்போது மூப்பர்கள் என்று அழைக்கிற உதவிக்காரர்களை டீக்கன் (DEACON) என்றும் குறிக்கப்பட்டுள்ளது.

எனவே, ஊழியக்காரர்களாகிய மூப்பர்கள் சபையை மேய்த்து கண்காணிக்க வேண்டும். டீக்கன் என்ற உதவிக்காரர்கள் சபையாருக்கும் ஊழியர்களுக்கும் இடையில் அநுசரணையாளர்களாக இருத்தல் வேண்டும். சபையாரோ கண்காணிகளுக்கு கீழ்ப்படிந்து அடங்கி ஜெபத்தில் தரித்து முறுமுறுப்பில்லாமல் பூரணத்திற்குள் கடந்து போக வேண்டும்.

இனி நாம் இரத்த சாட்சியாக தன்னை ஒப்புக்கொடுத்த கோதுமை வித்தாகிய ஸ்தேவானைக் குறித்து பகுதி பகுதியாய் சிந்திக்க பரிசுத்த ஆவியானவர் அருள்புரிவாராக.

# 3

# ஆச்சரியமான அழைப்பு

அப்போஸ்தலர்களுக்கு நிகராக பிரசங்கிப்பதிலும், அற்புதம் நிகழ்த்துவதிலும் தனி முத்திரைப் பெற்று விளங்கியவர் ஸ்தேவான்.

நமது அருமை இரட்சகர் ஒவ்வொருவரையும் பெயர்ச்சொல்லி அழைத்து, பிசாசுகளைத் துரத்தவும் பிணியாளர்களைச் சொஸ்தப்படுத்தவும் அப்போஸ்தலர்களுக்கு அதிகாரம் கொடுத்திருந்தார். ஆனால், ஸ்தேவானின் ஊழியப் பிரவேசத்தை ஆராய்ந்து பார்த்தால் நமக்கு மிகப்பெரிய ஆச்சரியம் உண்டாகும்.

எந்த ஒரு இடத்திலாவது கர்த்தர் அழைத்ததாகவோ அல்லது அழைத்துப் பிரித்தெடுக்கும்படி பரிசுத்த ஆவியானவர் திருவுளம் பற்றியதாகவோ ஸ்தேவானைக் குறித்த காரியத்தில் பரிசுத்த வேதாகமத்தில் குறிப்புகளைக் காண முடியாது.

சவுல் என்கிற பவுலை கர்த்தர் நேரடியாக சந்தித்தார், அழைத்தார். அவனுடைய அழைப்பைக் குறித்து அனனியா என்கிற சீஷனுக்கு கர்த்தர் வெளிப்படுத்தியிருந்தார். பவுல், பர்னபா ஆகியோரை மிஷனெரிப் பணிக்கென வேறு பிரிக்க வேண்டி பரிசுத்த ஆவியானவர் திருவுளம்பற்றியிருந்தார்.

ஆக, ஒவ்வொரு மனிதரையும் தனித்தனியாக அழைத்த நமதாண்டவர் ஸ்தேவானை எந்த விதத்திலும் அழைக்கவில்லை என்பது வேதம் தருகிற தெளிவான சாட்சி.

இப்படி தேவனால் பிரத்தியேக அழைப்பைப் பெறாத



போதிலும் கூட அவர் மிகப்பெரிய சாதனைகளை நிகழ்த்தியிருக்கிறார். மக்களால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறார் என்பதை யோசித்துப் பார்க்க நாம் கடமைப்பட்டுள்ளோம்.

“ஆரோனைப் போல் ஒருவன் அழைக்கப்படாவிட்டால், ஒருவனும் இந்த கனமான ஊழியத்திற்குத் தானாய் ஏற்படுவதில்லை” (எபிரெயர் 5:4) என்று வேதம் சொல்லுகிறது.

சிலர் இந்த வசனத்தை மேற்கோள் காட்டியே சிலரை ஊழியம் செய்ய விடாமல் தடுத்து விடுகின்றனர். ஓ! ஊழியம் என்றால் சாதாரணமாக நினைக்கக்கூடாது. ஆ! நீ ஆரோனைப்போல் அழைக்கப்பட்டாயா? என்று கேள்வி மேல் கேள்வி கேட்டு மனதை நோகடித்து ஆத்தும பாரத்தை சாகடித்து விடுகிறார்கள்.

பலர் இந்த வசனத்தை சரியாய்ப் புரிந்துகொள்ளவில்லை. புரிந்து கொள்ள முற்படுவதுமில்லை. இந்த வசனத்தை பரிசுத்த ஆவியானவரின் ஒத்தாசையோடு தியானம் செய்து பார்த்தால், விசாலமான இருதயமும், விரிவான வேத விளக்கமும் நமக்கு உண்டாகும்.

**ஊழியம் செய்கிற எண்ணம் தானாய் உண்டாவதில்லை. எனவே, ஊழியம் செய்ய மனோ வாஞ்சையாய் வந்தவர்கள் ஆரோனுக்கு ஒத்த தேவ அழைப்பைப் பெற்றிருக்கிறார்கள் என்பது தான் சரியான விளக்கமாக இருக்கமுடியும்.**

இன்னும் வேதத்தை கூர்ந்து வாசித்துப்பாருங்கள். மோசேயை முட்செடியில் தரிசனம் தந்து அழைத்த தேவன் ஆரோனை அப்படி அழைத்தாரா? என்று ஆராய்ந்தால், இல்லை என்பது தான் பதிலாய் இருக்கிறது.

மோசேக்கு ஆரோனை வாயாக தேவன் தந்தார். (யாத்

4:16) இந்த செய்தியைக் கர்த்தர் மோசேக்கு மாத்திரம் தந்தார். ஆனால், ஆரோனைச் சந்தித்து, "நீ வனாந்திரத்தில் மோசேக்கு எதிர்கொண்டு போ" (யாத் 4:27) என்று மட்டும் தேவன் சொன்னார்.

மோசேயைச் சந்திக்கும்படி ஆரோனிடம் சொன்னாரே தவிர, என்ன ஊழியம்? என்ன அடையாளம்? என்றெல்லாம் ஏதும் சொல்லவில்லை என்பதை இங்கே நீங்கள் கண்டறியலாம்.

மற்றொன்றை நீங்கள் கவனிக்க வேண்டும். மோசே தேவனால் அழைக்கப்பட்டவன். ஆரோன் தேவனுடைய தீர்க்கதரிசியாக மோசேயின் மூலம் அழைக்கப்பட்டவன்.

இதைப்போன்ற ஒரு ஒழுங்குமுறையைத் தான் அப்போஸ்தலர் ஆறாம் அதிகாரத்தில் நாம் வாசிக்கிறோம். ஆதிச் சபையில் ஏற்படுத்தப்பட்ட ஏழு பந்தி விசாரிப்புக்காரர்கள் தேவனால் இந்தப் பணிக்காக தெரிந்தெடுக்கப்பட்டவர்களல்ல. **அவர்களை சபையார் தெரிந்து கொண்டனர். அப்போஸ்தலர்கள் கைகளை வைத்து அங்கீகரித்தனர்.** (SEVEN DEACONS WERE CHOSEN BY THE DISCIPLES AND ORDAINED BY THE APOSTLES)

எனவே, கர்த்தரால் நேரடியாய் அழைக்கப்பட்டவர்கள் மாத்திரமல்ல, ஆவிக்குரிய தலைவர்கள், விசுவாசிகள் மூலமாக தேர்வு செய்யப்படும் எந்த நபரும் தேவனுடைய நற்செய்தியை அறிவிக்க, அற்புதம் செய்ய தடையில்லை.

தேவனுடைய ஊழியத்தில் வித்தியாசங்கள் இருக்கலாம். வரங்களிலும் வித்தியாசம் இருக்கலாம். இவைகளின் பொருட்டு அழைப்பும் நபருக்கு நபர் மாறலாம். ஆனால், **இரட்சிப்பின் நற்செய்தியை அறிவிக்க எந்தவித பிரத்தியேக அழைப்பும் எவருக்கும்**



**அவசியமில்லை.**

மட்டுமல்ல, வரங்களில் வித்தியாசம் இருந்தாலும், அற்புதங்கள் அடையாளங்கள் நிகழ்த்த தனியான அழைப்பு அவசியமில்லை. இப்படி இதற்கு தனியான அழைப்பு வேண்டும் என்கிறவர்கள் சுயநலவாதிகள். தேவனுடைய இராஜ்ஜியம் பரம்பக்கூடாதபடி தடுக்கிற தடைகற்கள்.

இங்கே நான் மேற்கோள் காட்டுகிற இரண்டு வசனங்களை வாசித்துப்பார்த்தால், எனது கூற்று நியாயமானதா? இல்லையா? என்பதை உங்களால் உணர முடியும்.

"நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும் படிக்குத் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்" (1 பேதுரு 2:9)

"விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்; நவமான பாஷைகளைப் பேசுவார்கள்.

சர்ப்பங்களை எடுப்பார்கள்; சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது; வியாதியஸ்தர் மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள் என்றார்". (மாற்கு 16:17,18)

பார்த்தீர்களா! நற்செய்தியை அறிவிப்பதற்கும், பிசாசுகளைத் துரத்துவதற்கும், வியாதிஸ்தர்களைச் சொஸ்தமாக்குவதற்கும் பிரத்தியேகமான அழைப்பு தேவையில்லை. இரட்சிக்கப்பட்டு அவரை விசுவாசிக்கிற

அனைவருக்கும் அந்த அந்தஸ்து உண்டாயிருக்கிறது.

இப்படித்தான் ஸ்தேவான் ஆச்சரியமான அழைப்பைப் பெற்றிருந்தார். ஏழு பேரை சபை தெரிந்து கொண்டது. அந்த ஏழு பேரின் பெயரை அப்போஸ்தலர் ஆறாம் அதிகாரத்தில் வாசிக்கவும் முடிகிறது. ஆனால், ஸ்தேவான் பிலிப்பு இவ்விருவரின் பெயர்களைத் தவிர, மற்றவர்களின் பெயர்களை அதன்பின்னர் பார்க்க முடியவில்லை.

மற்ற ஐவர் என்ன ஆனார்கள் என்று தெரியவில்லை. ஒருவேளை அப்பப்பா! பிரசங்கிக்க அற்புதம் செய்ய அப்போஸ்தல அழைப்பு வேண்டும். நமக்கேன் வம்பு? சாப்பாடு போடுகிற – தின்கிற வேலை மட்டும் போதும் என்று இருந்து விட்டார்களோ, என்னவோ?

ஆனால் ஸ்தேவான் – பிலிப்பு இவர்களுக்குள் கிறிஸ்துவின் அன்பு பற்றியெரிந்தது. அதனால் தான் ஒருவர் முதல் – இரத்தச் சாட்சியானார்; மற்றவர் முதல் – மிஷனெரி ஆனார். **எந்த விசுவாசி கிறிஸ்துவின் அன்பில் நிரம்பி, அனல் பற்றி எரிகிறானோ அவனைக் கர்த்தர் அக்கினியாய் பயன்படுத்துகிறார் என்பதற்கு ஸ்தேவான் ஒரு நல்ல சாட்சி.**

ஸ்தேவானை சபை தெரிந்து கொண்டது எதற்குத் தெரியுமா? **பந்தி விசாரிப்பு செய்யும் படியாகத் தான்.** ஆனால், ஸ்தேவானோ அந்த வட்டத்துக்குள் தனது காரியத்தை நிறுத்திக் கொள்ளவில்லை. **சபையிலே பந்தி விசாரித்தார்; சந்தியிலே சத்தியத்தை அறிவித்தார்.**

பிரியமான விசுவாசிகளே! சற்று கவனியுங்கள். உடனே, பாஸ்டராக வேண்டும். அங்கி போட வேண்டும். மேடை ஏற வேண்டும். வண்ண வண்ண சஃபாரி உடுத்திக்கொண்டு சாகசம் செய்ய வேண்டும் போன்ற எண்ணற்ற கனவுகளை விட்டு விடுங்கள். நற்செய்தி



அறிவிக்க இவைகள் தேவையில்லை. நீங்கள் எந்த நிலையில் இருக்கிறீர்களோ அந்த நிலையிலேயே ஆண்டவருக்கு அற்புத சாட்சியாய் விளங்க முடியும்.

பந்தி விசாரிக்க என்னைப்போட்டு விட்டார்களே. இனி எப்படி நான் ஊழியம் செய்ய முடியும் என்று போக்குச் சொல்ல முடியாது. சபையில் உங்களுக்கு இருக்கும் கடமைகளை ஸ்தேவான் செய்தது போல் செய்வதற்கு முழுமையான மனது உங்களுக்கு இருந்தால் மாத்திரமே, உங்களால் அற்புதங்களையும், அடையாளங்களையும் செய்ய முடியும். எனவே சபையில் உங்களின் பொறுப்பு என்னவோ அதை ஒழுங்காக முதலில் செய்யுங்கள்.

கர்த்தருக்குள் நித்திரையடைந்த பாஸ்டர். சுந்தரம் ஐயா அவர்கள் ஊழியர்களை உற்சாகப்படுத்தும்படி பல நல்ல வார்த்தைகளைச் சொல்லுவார்.

“தகப்பன் வீட்டு வயலில் கதிர் முற்றி, பயிர் சாய்ந்தால், தகப்பன் சொல்லி அறுக்கத் தேவையில்லை. தகப்பனிடம் தானே சொல்லிவிட்டு, மகன் அறுக்க வேண்டும். அதுவும், பயிர்களை ஆடுகள் மேய்கிறதென்றால், தகப்பனிடம் சொல்லக்கூடத் தேவையில்லை. பதறி, ஓடி ஆட்டை விரட்ட வேண்டும். தகப்பனின் வயல் நமது வயல் அல்லவா?” என்று சொல்லிவிட்டு, (NEED IS CALL) “தேவையே அழைப்பு” என்று சொல்லுவார்.

எங்கு நமது ஊழியம் அல்லது செயல்பாடு தேவைப்படுகிறதோ, அதுவே நமது ஊழியத்திற்கு கொடுக்கப்படுகிற அழைப்பு என்பதை ஞாபகத்தில் வையுங்கள்.

எனக்குப் பிரியமான வாலிப சகோதர, சகோதரிகளே கர்த்தர் என்னை அழைக்கட்டும் என்று காலத்தைக் கடத்தாதீர்! பிரத்தியேக அழைப்பு வரும்போது அதை

ஜெபத்தோடு செய்யுங்கள். அதுவரை அழைத்தவரின் புண்ணியத்தை அறிவிக்காமல் மௌனமாயிராதேயுங்கள்! உடனே எழும்பிடுவீர்!

தெய்வ பிள்ளையே! கீழ்ப்படிந்து செயல்படுவீர்களானால், மாற்கு 16:17,18ம் வசனங்களின்படி பிசாசுகள் நடுங்கி ஓடும்; பிணியாளிகள் உடனே சொஸ்தமாவார்கள். ஸ்தேவானைக் காட்டிலும் உங்கள் வாழ்க்கையில் அற்புதங்களும், அடையாளங்களும் நிகழப்போகிறது என்றுணர்ந்து களிப்பாய்த் துதியுங்கள் – களத்தில் குதியுங்கள்.

பெற்றோர்களே! இந்த ஆச்சரியமான அழைப்பைக் குறித்து உங்களுக்கும் சில வார்த்தைகளைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். தேவன் தமது ஒரே மகனை இந்தப் பூவுலகிற்கு மிஷனெரியாக அனுப்பி வைத்தார். நீங்கள் பல மகன்களை வைத்திருந்தும், இந்தக் கனமான ஊழியத்திற்கு அவர்களில் ஒருவரை ஏன் அனுப்பக்கூடாது?

கர்த்தர் அழைக்கட்டுங்க! என்று நீங்கள் சொல்வது என் காதில் விழுகிறது. உங்கள் மகனை கர்த்தர் சொல்லியா டாக்டருக்குப் படிக்க வைத்தீர்கள், கர்த்தர் சொல்லியா பொறியியல் துறைக்கு அனுப்பினீர்கள்?

அல்லவே–அல்ல. உங்களின் வாஞ்சையினிமித்தமே நீங்கள் அப்படிச் செய்தீர்கள் அல்லவா! அப்படியானால் கர்த்தரின் ஊழியத்திற்கும், நீங்களாகவே மனம் உவந்து ஒருவரை ஏன் அனுப்பக்கூடாது?

சபையின் ஊழியத்தை இரண்டு பிரிவுகளாகப்பிரித்து விடலாம். அப்போஸ்தலர் ஆறாம் அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறபடி வசனத்தைப் போதிக்கிற ஊழியம், பந்தி விசாரிக்கிற ஊழியம் என்பவைகளே அவைகள்.



முந்தினதற்குத் தெளிவான அழைப்பும், உறுதியும் தேவை. பிந்தினதற்கு பரிசுத்த ஆவியும், நற்சாட்சியும் தேவை. பந்தி விசாரணை அல்லது உதவிக்காரரின் ஊழியத்தைச் செய்து கொண்டே நற்செய்தியின் ஊழியத்தையும், சாட்சியின் ஊழியத்தையும் செய்யலாம். தடை ஏதுமில்லை.

அதைப்போல வசனத்தைப் போதிக்கும் ஊழியத்தைப் பெற்றவர்கள், தங்கள் எல்லையைத்தாண்டி வரக்கூடாது. வரவே கூடாது. அவர்களுக்கு சபையை விசாரித்து, மணவாட்டியாக ஆயத்தம் செய்ய வேண்டிய பொறுப்பு உள்ளபடியால், அப்படிப்பட்டவர்கள் வீணான அலுவல்களில் சிக்கிக் கொள்ளக்கூடாது.

தேவ வசனத்தைப் போதிக்கிற ஊழியத்தைப் (MINISTRY OF THE WORD) பெற்றிருக்கிறவர்கள் முதலாவதாக ஜெபத்தில் தரித்திருத்தல் வேண்டும். அடுத்ததாக தமக்கு அருளப்பட்ட ஊழியத்தின் வகை அறிந்து செயல்பட வேண்டும்.

வசனத்தைப் போதிக்கும் ஊழியம் என்பது ஏதோ நற்செய்தியை அறிவிக்கும் ஊழியம் அல்ல என்பதை தெளிவாய் உணர்தல் வேண்டும். சிலர் இன்று ஆலயப்பீடங்களில் இந்த உணர்வு இல்லாமல் பிரசங்கித்துக் கொண்டிருக்கிறார்கள். குள்ளமான சகேயுவையும், குருடனான பர்திமேயுவையும் வாரந்தோறும் அறிமுகப்படுத்துவதே இவர்களின் வேலை.

வசனத்தைப் போதிக்கும் ஊழியத்தின் அம்சங்களை சற்று கவனித்துப்பாருங்கள்!

**1. சுய இரத்தத்தால் இயேசு வாங்கியுள்ள சபையை மேய்த்துக் கண்காணிக்கிற ஊழியம் (அப் 20:28)**

**2. ஒப்புரவாக்குதலின் ஊழியம் (II கொரி 5:19)**

**3. புத்திச் சொல்லுகிற ஊழியம் (II கொரி 6:1)**

**4. பரிசுத்தவான்களைச் சீர்பொருந்தச் செய்கிற ஊழியம் (எபேசியர் 4:4)**

இந்த மகிமையான ஊழியத்தை இடைவிடாத ஜெபத்தோடு செய்ய வேண்டியது ஊழியர்களின் வேலை.

ஆக, ஊழியத்தில் வித்தியாசம் உண்டு. ஆவியானவர் ஒருவரே, அப்போஸ்தல அழைப்பைப் பெற்றவர்கள், அப்போஸ்தல ஊழியத்தைச் செய்யுங்கள். இரட்சிப்பையும், அபிஷேகத்தையும், பெற்ற தெய்வ பிள்ளைகள் சாட்சியின் ஊழியத்தையும், சுவிசேஷ ஊழியத்தையும் சந்தோஷமாய்ச் செய்யுங்கள்.

ஸ்தேவானைப் போல், அற்புதங்களையும், அடையாளங்களையும் செய்ய முடியும். ஆழமான ஆவிக்குரிய இரகசியங்களைப் பகிர்ந்து கொள்ளவும் முடியும்.

இதுவே, உங்களுக்குரிய உரிமை! அழைப்பு! இஃது ஆச்சரியமான அழைப்பு – ஆரோன் அழைப்புக்கு ஒப்பான ஆச்சரியமான அழைப்பு.

ஒளி படைத்த கண்ணினாய் வா! வா! வா!

உறுதி கொண்ட நெஞ்சினாய் வா! வா! வா!

# 4

# ஆவியில் நிறைந்த ஸ்தேவான்

உங்களுக்குள் ஏழுபேரைத் தெரிந்து கொள்ளுங்கள் என்று அப்போஸ்தலர்கள் சபையாரைப் பார்த்து, விளக்கெண்ணெய்த் தனமான அறிவிப்பைக் கூறாமல், **பரிசுத்த ஆவியும் ஞானமும் நிறைந்து நற்சாட்சியும் பெற்ற ஏழுபேரை தெரிந்து கொள்ளுங்கள்** என்று விளக்கமாக அறிவித்ததைக் கவனித்துப் பாருங்கள்!

ஒரு முக்கியமான காரியத்தை எழுதப்போகிறேன். அதை வாசித்தப்பின் சிலர் உதட்டைக் கடிக்கலாம்; கவலையில்லை.

கர்த்தரின் கனமான ஊழியத்தை வெற்றியோடு செய்ய ஒரு மனிதனுக்கு இருக்க வேண்டிய அடிப்படைத்தகுதி பரிசுத்த ஆவியின் அபிஷேகமே. இந்த பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெறாத நபர் ஊழியத்திற்குரிய அழைப்பை மாத்திரமல்ல, குறைந்தபட்சமாக ஊழியம் செய்ய அங்கீகாரம் பெறாதவர் என்பது மிகப்பெரிய உண்மை.

ஆகையால், பிரியமானவர்களே! பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெறாத நபரை ஊழியத்தில் பயன்படுத்தக்கூடாது. கூடுதலாக சொல்லப்போவோமானால், வேதாகமக் கல்லூரிகளில் இப்படிப்பட்டவர்களைச் சேர்த்துக் கொள்ளவும் கூடாது.

நம்முடைய இரட்சகர் இதையே செய்தார். இதையே செய்யும்படிச் சொன்னார். அவர் பரமேறிச்செல்லும் போது சொன்னதைக் கவனித்துப் பாருங்கள்!

**1.** ‘‘ஆகையால் நீங்கள் எருசலேமை விட்டுப்போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம்

நிறைவேறக் காத்திருங்கள்'' (அப் 1:5) என்று **கட்டளையிட்டார்.**

2. ''பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயோ முழுவதிலும், சமாரியாவிலும் பூமியின் கடைசி பரியந்தம் எனக்குச் சாட்சிகளாய் இருப்பீர்கள்'' (அப். 1 : 8) என்றார்.

இந்த வசனங்களில் வசனத்தின் ஊழியம், சாட்சியின் ஊழியம் போன்ற எதுவானாலும் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை முதலாவதாகப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதை நீங்கள் தெளிவாக உணரலாம்.

எனவே, ஊழியம் செய்யப் புறப்படுவதற்கு முன்பு நீங்கள் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டவராக இருத்தல் வேண்டும். ஆவியைப் பெறாமலும் நீங்கள் ஒருவேளை கிரியைகளை நடப்பிக்கலாம். ஆனால், சில வேளைகளில் எதிர்பாராத நிலையில் நீங்கள் வெட்கப்பட வேண்டிய பரிதாப நிலை ஏற்படும் என்று எச்சரிக்க விரும்புகிறேன்.

இன்று காலை ஜெப வீரர் களம் என்ற மாத இதழை வாசித்துக் கொண்டிருந்தேன். அதில், இதே கருத்தை வலியுறுத்தி சகோ. சாம் ஜெபத்துரை அவர்கள் ஒரு உண்மைச் சம்பவத்தை எழுதியிருந்தார். அஃது என்னை வெகுவாய்க் கவர்ந்தபடியால் நீங்களும் அறியும்படி இங்கே எழுதிகிறேன்.

தெலுங்கு பாப்திஸ்து சபை போதகர் ஒருவர் இருந்தார். அவர் ஜெபித்து பிசாசுகளையெல்லாம் துரத்துவார். அவர் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்றவர் அல்ல. விசுவாசிக்கிறர்களால் நடக்கும் அடையாளங்களாவன என்று மாற்கு 16 : 17ல் இயேசு சொல்லியுள்ள வாக்கின்படி நம்முடைய தேவன் கிருபையாய் அவர் மூலம் கிரியை நடப்பித்தார்.



இந்தப் போதகருக்கோ கொஞ்சம் பெருமை கூடிக் கொண்டது. பரிசுத்த ஆவியின் அபிஷேகம் தேவையில்லை என்று பெருமை பேச ஆரம்பித்து விட்டார். இந்த நிலையில் ஓர் பிசாசு ஓட்ட வேண்டிய வேளை வந்தது. இவர் போய் அந்தப் பிசாசை ஓட்ட முற்பட்டார்.

அந்தப் பிசாசோ, ''போதகரே, சும்மாயிரும், மற்ற ஆவிகளைப் போல் என்னைத் துரத்த முடியாது. என்னைத் துரத்த வேண்டும் என்றால், நீர் போய் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டு வாரும்'' என்று இவரைத் துரத்தி விட்டது.

போதகர் மனம் உடைந்து நேரே ஆலயத்திற்கு ஓடினார். கதறி அழுது ஜெபித்தார். கர்த்தர் அவரைக் கிருபையாய் அபிஷேகித்தார். அந்த வல்லமையான புதிய அபிஷேகத்தோடு அந்தப் போதகர் அதே பிசாசைத் துரத்தும்படிச் சென்றார். அவர் வருவதை அறிந்த பிசாசு அவர் துரத்தாமலே ஓடிப் போயிற்று.

பிரியமானவர்களே! இதுதான் உண்மை. பரிசுத்த ஆவியானவர் நம்மைப் பலப்படுத்துகிறார். வெற்றி சிறக்கப் பண்ணுகிறார். எனவே, தேவனுடைய சபையில் பெரிய ஊழியமோ, சிறிய ஊழியமோ பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்ற பின்னரே ஊழியம் செய்ய வேண்டும்.

நம்முடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தைக் குறித்து முன்னுரைக்கப்பட்ட தீர்க்க தரிசன வசனங்களை சற்று கவனித்துப் பாருங்கள்!

1. என் **ஆவியை** அவர்மேல் அமரப்பண்ணினேன். அவர் புறஜாதிகளுக்கு நியாயத்தை வெளிப்படுத்துவார் (ஏசா 42 : 1)

2. கர்த்தராகிய தேவனுடைய **ஆவியானவர்** என் மேல் இருக்கிறார். சிறுமைப்பட்டவர்களுக்கு சுவிசேஷத்தை

அறிவிக்க கர்த்தர் என்னை அபிஷேகம் பண்ணினார். (ஏசா. 61 : 1)

கிறிஸ்து பிறப்பதற்கு முன்பே சொல்லப்பட்ட இந்த வசனங்களின் உள்ளார்ந்த முக்கியத்துவத்தைப் பார்த்தீர்களா! இயேசுவும் இந்த தீர்க்கதரிசனத்தின்படியே முப்பது வருடங்கள் வரைக்கும் தமது வசன ஊழியத்தை ஆரம்பிக்காமல், பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்ற பின்னரே தமது ஊழியத்தை ஆரம்பித்தார்.

இப்படியாக, இயேசுவும் அப்போஸ்தலர்களும், பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்ற பின்னரே ஊழியத்திற்கு சென்றார்கள் என்று வேதத்தில் மிகத் தெளிவாக எழுதியிருக்க நாம் பரிசுத்த ஆவியை அசட்டை செய்யலாமா? அபிஷேகம் பெறாமல் ஊழியத்திற்குப் புறப்படலாமா? யோசித்துப் பாருங்கள். அபிஷேகத்தைப்பெற, அபிஷேகத்தைக் காத்துக் கொள்ள கவனமாய் இருங்கள்.

இங்கு இன்னும் ஒரு காரியத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். பரிசுத்த ஆவியின் அபிஷேகம் என்பது வேறு. ஆவியின் நிறைவு என்பது வேறு. அவ்விரண்டினையும் நீங்கள் சரியாய்ப் புரிந்து கொள்ளுதல் வேண்டும். தொடர்ந்து கொடுக்கப்பட்டுள்ள நான்கு மேற்கோள்களைக் கவனித்துப் பாருங்கள். அவர்கள் அபிஷேகத்தைப் பெற்றவர்கள்தான். கூடுதலான ஆவியில் நிறைந்திருந்தார்கள் என்பது அந்த மேற்கோள்கள் மூலமாக நமக்குத் தெரிய வருகிறது.

**1. ''இயேசு பரிசுத்த ஆவியினால் நிறைந்தவராய்'' (லூாக் 4 : 1)**

**2. ''பேதுரு பரிசுத்த ஆவியினால் நிறைந்தவனாய்'' (அப். 4 : 8)**

**3.''சவுல் பரிசுத்த ஆவியினால் நிறைந்தவனாய் அவனை உற்றுப் பார்த்து... (அப். 13 : 9)**



**4. ''ஆவியினால் நிறைந்த ஏழுபேரைத் தெரிந்து கொண்டு...'' (அப். 6 : 3)**

எனவே பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்றவர்கள். ஜெபத்திலும், ஜீவியத்திலும் தேவ ஆவிக்கு முக்கியத்துவம் கொடுக்கும்போது அவர்கள் நிறைந்து இருப்பார்கள் என்பது அனுபவப்பூர்வமான உண்மையாகும்.

ஸ்தேவான் பரிசுத்த ஆவியால் நிறைந்திருந்த படியினால் சீஷர்களுக்குரிய சராசரி ஆவிக்குரிய தகுதிகளையும், தன்மைகளையும் தாண்டி வித்தியாசமான விசேஷமான மனிதராகக் காணப்பட்டார்.

அதினால்தான் அவரைப் பற்றி எழுதப்பட்ட குறிப்புகளில் ஆவியில் நிரம்பியிருந்தார் என்று மாத்திரம் குறிப்பிடாமல், பல்வேறு சிறப்பு காரியங்களில் நிரம்பியிருந்தார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (அவைகளைக் குறித்து இந்த அத்தியாயத்தில் கவனிப்போம்)

பரிசுத்த ஆவியின் அபிஷேகம் நம்மை வேறே மனிதராக மாற்றுகிறது. பரிசுத்த ஆவியின் நிறைவோ தேவ வல்லமையை வெளிப்படுத்தும், தெய்வீக மனிதராக நம்மை மாற்றுகிறது.

தேவனுடைய தாசன் ஒருவர், ''மிருகங்களுக்கு ஐந்து அறிவு; மனிதர்களுக்கு ஆறு அறிவு'' பரிசுத்த ஆவியைப் பெற்ற நமக்கோ ஏழு அறிவு'' என்பார். அது மெத்த உண்மை என்று நான் நம்புகிறேன்.

பரிசுத்த ஆவியின் நிறைவைப் பெற்ற மனிதன் எந்த இடத்திலும் வெட்கப்பட்டுப் போக மாட்டான். மாறாக, கேட்போர் நிலை குலைந்து போவார்கள். ''இந்த மனிதன் பேச்சைப் போல் எவருமே இதுவரை பேசியது இல்லை'' என்று இயேசுவைப் பார்த்து மக்கள் ஆச்சரியப்பட்டது போல, நம்மையும் பார்த்து, அதிசயித்து நிற்பார்கள்.

**ஞானத்தால் நிறைந்தவன்**

பந்தி விசாரிப்பு பணிக்கு தெரிந்தெடுக்கப்படப் போகிற நபர்களுக்கு ஞானத்தின் **நிறைவு** அவசியம் என்று அப்போஸ்தலர்கள் எதிர்பார்த்தார்கள்.

உலக ஞானத்தை வைத்துக் கொண்டு தேவனின் ஊழியத்தில் எதையும் சாதிக்க முடியாது. உலக ஞானம் தேவனுக்கு முன்பாக பைத்தியமாக இருக்கிறது என்று வேதம் சொல்லுகிறதை நீங்கள் அறிந்திருக்கிறீர்களே.

பரிசுத்த ஆவி ஞானத்தின் ஆவியாய் நமக்கு அருளப்படுகிறபடியினால் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பைத்தியமான மனிதனை ஞானவானாக மாற்றுகிறது.

இயேசு கிறிஸ்து நமக்கு இரட்சகர் மாத்திரமல்ல. நமக்கு ஞானமாகவும் இருக்கிறார் என்று 1. கொரி 1 : 31ல் எழுதப்பட்டுள்ளது. கிறிஸ்து, நாம் இரட்சிக்கப்படும் போது நமக்கு ஞானமாய் நிறைந்திருக்கிறது போலவே பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெறும் போது அந்த ஆவியானவர் ஞானத்தைப் போதிக்கும் வசனத்தை நமக்கு வரமாகத் தருகிறார்.

கிறிஸ்துவானவர் ஞானத்தின் ஆவியினால் நிறைந்தவராய் தமது உலக ஊழியத்தை வெற்றியோடும் மகிமையோடும் நிறைவேற்றி முடித்தார். அவரை ஏதாகிலும் குற்றத்தில் சிக்க வைக்க வேண்டும் என்று பரிசேயர்களும் வேதபாரகர்களும் மாறி மாறி மாரி போல் கேள்வி பொழிந்தனர்.

ஆகிலும் அவைகளில் ஒன்றிலாகிலும் இயேசு சிக்கவில்லை. இராயனுக்கு வரி கொடுக்கலாமா?, ஏழு சகோதரர்களுக்கு மனைவியாக இருந்தவள் மறுமையில் யாருக்கு மனைவியாய் இருப்பாள்? என்பது போன்ற நெருக்கடியான கேள்விகளை அவர்கள் தொடுத்தார்கள்.



கரணம் தப்பினால் மரணம் என்று சொல்லுவார்களே அப்படிப்பட்ட சூழ்நிலையில் இயேசு இருந்தார். ஆகிலும் எவராலும் அவரை வீழ்த்த முடியவில்லை. இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடையதை தேவனுக்கும் செலுத்துங்கள் என்றும், பரலோகத்தில் கொள்வனையும் இல்லை கொடுப்பனையும் இல்லை என்றும் முகத்தில் அறைந்தாற்போல் பதில் சொல்லி முற்றுப்புள்ளி வைத்து விட்டார்.

இத்தகைய ஞானம் ஸ்தேவானுக்குள் நிறைந்திருந்தது என்பதை நினைத்துப் பார்க்கும் போது என்னுள் மகிழ்ச்சி பொங்கி எழுகிறது. அந்த அநந்த ஞானத்தால் பந்தி விசாரிப்பை மாத்திரம் அல்ல, வசன ஊழியத்தையும், அற்புத அடையாள ஊழியத்தையும் வெகு சிறப்பாய் நிகழ்த்தினார் – நிறைவேற்றினார்.

ஸ்தேவானைப் போன்றவர்கள் எழும்பிய கால கட்டத்தில் ஆதி சபையில் நடந்தேறிய அதிமுக்கியமான காரியம் என்ன தெரியுமா? தேவ வசனம் விருத்தியடைந்தது (அப். 6 : 7) அதன் பொருட்டு ஆசாரியர்களில் அநேகர் விசுவாசத்திற்குள் வந்தார்கள். இதன் எதிரொலியாக சிலர் எழும்பி ஸ்தேவானோடே தர்க்கம் பண்ணினார்கள் (அப். 6 : 9) அவர் பேசிய ஞானத்தையும், ஆவியையும் எதிர்த்து நிற்க அவர்களால் கூடாமற்போயிற்று.

நீங்கள் ஒரு காரியத்தை முதற்கண் புரிந்து கொள்ளுதல் வேண்டும். நான் ஆவியைப் பெற்றிருக்கிறேன் என்று அக மகிழ்வது நல்லது தான். ஆனால், அந்த ஆவியினால் நீங்கள் ஞானவான்களாய் இல்லத்திலும், சபையிலும், சமுதாயத்திலும் உலா வர வேண்டும். அப்படியில்லாத பட்சத்தில் நீங்கள் பெற்றிருக்கிற அபிஷேகம் கேள்விக்குறியானதே.

ஆவியில் நிறைந்திருக்கிறவன் நிச்சயமாக ஞானத்தில்

நிறைந்திருக்க வேண்டும். இதற்கு இயேசு கிறிஸ்துவும், ஸ்தேவானும் மாத்திரமல்ல பவுலும் நமக்கு மூன்றாவது சாட்சியாக இருக்கிறார். பவுலுடைய ஊழியத்தின் நாட்களில் அத்தேனே பட்டணத்திற்குச் செல்ல வேண்டிய வேளை வந்தது. அங்கே அவர் நெருக்கடியான சூழ்நிலையில் நிற்க வேண்டிய நிலை, கிறிஸ்துவைப் பிரசங்கிக்கவும் முடியாது, பிரசங்கியாமல் இருக்கவும் முடியாது. ஏறக்குறைய இரண்டுங்கெட்டான் நிலை.

ஆனால், ஞானத்தின் நிறைவு அங்கு கிரியை செய்ய ஆரம்பித்து விட்டது. கொந்தளிக்கும், கொக்கரிக்கும் மக்களைப் பார்த்து, **''எந்த விஷயத்திலும் நீங்கள் மிகுந்த தேவதா பக்தியுள்ளவர்கள் என்று காண்கிறேன்''** (அப். 17 : 22) என்று ஒரு போடு போட்டார். அவ்வளவுதான், காற்றும் கடலும் இயேசுவின் வார்த்தைக்கு அடங்கினது போல இந்த சீற்றம் கொண்ட கூட்டமும் செவி கொடுக்க அமைதலாயினர்.

அடுத்து அவர் அங்கே எழுதப்பட்டிருந்த **''அறியப்படாத தேவனுக்கு''** என்ற வாசகத்தை வைத்துக் கொண்டு இரட்சகரையே அறிவித்தார். பிரியமானவர்களே! நீங்கள் ஆவியைப் பெற்றவர்களாக இருந்தால், ஞானத்தின் நிறைவை வாஞ்சியுங்கள். ஞானமற்றவர்களைப் போல நடவாமல், ஞானமுள்ளவர்களாக நடந்து கொள்ளப் பாருங்கள்.

நான் இளங்கலை, முதுகலை பட்டம் பெற்றவன் என்று எண்ணி சாதுரியமான – ஊழியம் செய்யலாம், செய்து விடுவேன் என்று ஏதாகிலும் எண்ணம் உங்கள் உள்ளத்தில் எங்கேயாகிலும் ஒட்டிக் கொண்டிருந்தால், அதைக் கொஞ்சம் தட்டி உதறிவிடுங்கள் அல்லது அதை வெட்டி வீசி விடுங்கள். இஸ்ரவேலில் போதகனாக இருந்த நிக்கொதேமு மண்டை முழுவதும் வேத அறிவை நிறைத்து வைத்திந்தார். ஆனால், அதை வைத்துக் கொண்டு அவனால் இயேசுவின்



வார்த்தையையும், வசனத்தையும் புரிந்து கொள்ள முடியவில்லை.

மீனவனாக இருந்த பேதுருவோ ஞானத்தால் நிறைந்திருந்தான். ஆகையால், பழைய ஏற்பாட்டு வசனங்களை பெந்தெகொஸ்தே நாளில் மேற்கோள் காட்டி காரியங்களை விளக்கினான். நிக்கொதேமோ ஞானம் இல்லாதபடியினால், தேவ வசனமும் விளங்காமல் விழித்தான்.

முழங்காலில் நில்லுங்கள்! ஆவியில் துதியுங்கள்! ஞானத்தால் நிறையுங்கள் ! ஞாலத்தை வெல்லுங்கள் !

## விசுவாசத்தால் நிறைந்தவன்

விசுவாசியாய் இருப்பது வேறு – விசுவாசத்தால் நிறைந்திருப்பது வேறு. விசுவாசியாக இருந்த ஸ்தேவான், விசுவாசத்தில் நிறைந்த வீரனாய்த் திகழ்ந்தார் என்பதே இங்கு குறிப்பிட வேண்டிய முக்கியமான காரியம்.

அப்போஸ்தலர்கள் ஆவி, ஞானம், சாட்சி என்ற மூன்று அளவுகோல்களை மாத்திரம் வைத்திருந்திருந் தார்கள், அந்த அடிப்படை அளவுகோல்களையும் மிஞ்சி, விசுவாசத்தில் விஞ்சி ஸ்தேவான் நின்றார் என்பதை அப். 6 : 5–ல் ஆவியானவர் பதிவு செய்து வைத்திருக்கிறார்.

இங்கே விசுவாசம் என்றால் என்னவென்று நாம் நிதானித்து அறிதல் அவசியம். அது புரியாமல் தான் சிலர் நெறிதவறிப் போகிறார்கள். பலர் குறி தவறி போகிறார்கள்.

விசுவாசம் என்றால், என்ன என்பதை விளக்குவதற்கு முன்னர், எவையெல்லாம் விசுவாசம் அல்ல என்பதை விளக்கிட விரும்புகிறேன். 1கொரி 13 : 43ல் அன்பு, விசுவாசம் நம்பிக்கை என்று சொல்லப்பட்ட மூன்று காரியங்களைக் கவனித்துப் பாருங்கள்! இவை மூன்றும் தனித்தனியான அனுபவங்கள். எனவே, விசுவாசம் என்பது

வேறு, நம்பிக்கை என்பது வேறு.

சிலருக்கு எது விசுவாசம், எது நம்பிக்கை என்று அறியாமல் தங்களுக்குள்ளே குழப்பத்தை ஏற்படுத்திக் கொண்டு எதற்கெடுத்தாலும், **நான் அப்படித்தான் விசுவாசிக்கிறேன்** என்கிறார்கள்.

தேவனால், வேதத்தில் அருளப்பட்டிருக்கிற வாக்குத்தத்தங்களும், சத்தியங்களும் எனக்கு கிடைக்கும் அல்லது நிறைவேறும் என்று எதிர்பார்ப்பது நம்பிக்கை எனப்படும்.

உலகப்பிரகாரமாய், பணத்தால் – அறிவால், திறமையால் கிட்டாத ஒரு காரியத்தை என் தேவன் இன்றே எனக்குச் செய்வார் என்று எதிர்பார்ப்பது விசுவாசம் எனப்படும்.

நம்பிக்கை எதிர்காலத்தைச் சார்ந்த ஒன்று. விசுவாசம் நிகழ்காலத்தை அடிப்படையாக கொண்ட ஒன்று. நம்பிக்கை இருக்கின்றவைகளைக் குறித்தவை. விசுவாசம் காணப்படாதவைகளின் நிச்சயமாயிருக்கிறது.

எனவே சில காரியங்களின் மேல் நமக்கு இருக்கும் ஆழமான நம்பிக்கை விசுவாசம் ஆகாது. (HOPE IS NOT FAITH)

அடுத்து அரியதற்கறிய காரியங்களை, தேவனால் செய்ய முடியும் என்று மனதளவில் ஒத்துக் கொள்வது விசுவாசமாகாது.

தேவனால் கூடும். அவர் இதைச் செய்ய வல்லமையுடையவர் என்று சிலர் பெருமையாகப் பேசுவார்கள். பெருந்தன்மையோடு ஒத்துக் கொள்வார்கள். ஆனால் தத்தம் வாழ்க்கையில் தெய்வீகக் கிரியை நடைபெற இடங்கொடுக்க மாட்டார்கள் அல்லது காத்திருக்க மாட்டார்கள். இப்படிப்பட்ட அறிக்கைகள் விசுவாசமாகாது.



(MENTAL ASSENT IS NOT FAITH)

**எனவே 1. அரிதான காரியங்களை ஒத்துக் கொள்வதும், 2. காணப்படாதவைகளை எதிர்பார்ப்பதும் 3. தத்தம் வாழ்க்கையில் அவைகளைப் பெற்றுக் கொள்ள முனைவதுமான முப்பரிமான எதிர்பார்ப்பே விசுவாசம் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.**

ஆபிரகாம் தேவனுடைய வாக்குத்தத்தத்தை... முழுநிச்சயமாய் நம்பி... விசுவாசத்தில் வல்லவனானான் என்று ரோமர் 4–ம் அதிகாரத்தில் எழுதப்பட்டுள்ளதை நாம் சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இந்த விசுவாசத்தைக் குறித்து ஏராளமாக எழுதிக் கொண்டே போகலாம். தேவனுடைய பிள்ளைகள் மத்தியிலே இரண்டு விதமான விசுவாசம் செயல்படுகிறது என்பதை வேதம் நமக்குப் படம் பிடித்துக் காண்பிக்கிறது.

முதலாவது, **பொதுவான விசுவாசம்.** இது இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்ட எல்லார்க்குள்ளும் செயல்படுகிறது. இந்த விசுவாசத்தைப் பெற்றிருக்கிற ஒவ்வொரு விசுவாசியும் மாற்கு 16 : 17ன் படி பிசாசுகளைத் துரத்தவும், வியாதியஸ்தர்களைக் குணமாக்கவும் கிருபை பெற்றவர்களாய் இருக்கிறார்கள்.

இந்த பொதுவான விசுவாசமும் ரோமர் 12:3ன் படி அவனவனுக்கு தேவன் விசுவாசத்தை பகிர்ந்து அளவோடு அருளுகிறார் என்பது புலனாகிறது. எனவே, பொதுவான விசுவாசமும் மனிதருக்கு மனிதர் வித்தியாசப்பட்டிருக்கும்.

மற்றும் ஒரு விசுவாசம் உண்டு. ரோமர் 12 : 9ல் **அந்த பரிசுத்த ஆவியினாலேயே விசுவாசமும் அளிக்கப்படுகிறது** என்று எழுதப்பட்டதிலிருந்து பரிசுத்த ஆவியானவர் விசுவாசத்தை ஒரு சிறப்பு வரமாகவே அருளுகிறார் என்று புரிந்து கொள்ளுகிறோம்.

இப்பேர்ப்பட்ட வீரிய விசுவாசத்தில் ஸ்தேவான் நிறைந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. வேத புத்தகத்திலுள்ள குறிப்புகளை வைத்துக் கொண்டு பவுல், பேதுரு போன்றோர் எத்தனை அற்புதங்கள், என்னென்ன அற்புதங்கள் செய்தார்கள் என்பதை கணக்கிட்டுச் சொல்ல முடியும். எழுதமுடியும். அதே வேளையில், ஸ்தேவான் எத்தனை அற்புதம் செய்தார் – என்ன அற்புதம் செய்தார் என்பதைக் கணக்கிட வேதத்தில் குறிப்பு இல்லை.

அவர் விசுவாசத்தில் நிறைந்திருந்தார். அதன் பயனாய் அற்புதங்கள் செய்தார் என்பதை அப். 6 : 8ல் காண்கிறோம்.

இந்த வேதப் பகுதியை நான் ஆவியில் நிறைந்து யோசித்த போது என் உள்ளம் நன்றியால் தேவனைத் துதித்தது. ஸ்தேவான் எத்துணை அற்புதம் செய்தார் எப்படி செய்தார் என்ற பட்டியல் வேதத்தில் எழுதப்பட்டிருந்தால் அப்போஸ்தலருடைய நடபடிகள் 28 அதிகாரத்தில் முடிக்கப்படாமல், ஒரு வேளை 82 அதிகாரங்களாக விரிவாக்கப்பட்டிருக்கும். இந்த நிலையை தவிர்க்க ஸ்தேவானின் அற்புதங்களை, **பெரிய அற்புதங்களையும், அடையாளங்களையும் செய்தான்** என்று ஆவியானவர் தமது அநந்த ஞானத்தால் அடக்கி எழுதிவிட்டார்.

விசுவாசத்தில் நிறைந்த மனிதன் அற்புதங்களை அல்ல, **பெரிய அற்புதங்களைச் செய்வான்** என்பதற்கு ஸ்தேவானின் வாழ்க்கை நமக்குச் சாட்சியாயிருக்கிறது.

அநேக விசுவாசிகள் விசுவாசமில்லாமல் வீழ்ந்து போகிறார்கள். விலகிப்போகிறார்கள். இதற்கு அடிப்படையான சில காரியங்களைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அன்புக்குரிய விசுவாச அன்பர்களே! இங்கு சில காரியங்களை கூடுதலாய் நாம் சிந்திப்பது நமது ஆவிக்குரிய வாழ்விற்கு மிகவும் அவசியம் என்று நான் கருதுகிறேன்.

முதலில், ஸ்தேவான் சாதாரண சீஷன், அடுத்து,



சபையின் உதவிக்காரன், அதற்கடுத்து, அற்புதங்களைச் செய்கிறவன். எவ்வளவு சீரான வளர்ச்சி என்பதை பார்த்தீர்களா!

இன்று நமது நிலை என்ன? அன்றும் விசுவாசி இன்றும் விசுவாசி, நாளையும் விசுவாசி. இதுதானே அநேகரின் நிலை. நேற்று அற்புதங்களை எதிர்பார்த்து பெற்றுக்கொண்டீர்கள். இன்று அற்புதங்களை எதிர்பார்த்து அமர்ந்திருக்கிறீர்கள். நாளை அற்புதம் ஏதும் நடக்காதா என்று ஏங்கி நிற்கிறீர்கள். அதுதானா உண்மையான நிலை?

விசுவாசியின் வளர்ச்சியின் படிகள் எவை? என்பதைக் கவனித்துப்பாருங்கள்! முதலில் சீஷன். அடுத்து உதவிக்காரன். அடுத்து அற்புதங்களைச் செய்கிறவன். நன்றாகக் கவனியுங்கள். **நீங்கள் அற்புதங்களைப் பெற ஏங்கி நிற்பவர்களாய் அல்ல.** அற்புதங்கள் செய்ய எழும்பி நிற்கிறவர்களாய் மாற வேண்டும் என்பதே தேவனின் விருப்பம்.

இந்த வளர்ச்சி உங்களிடத்தில் காணப்படுகிறதா? இல்லையென்றால், நீங்கள் வறண்டு போன கிணறு. வளர்ச்சியடையாத விருட்சம் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஸ்தேவானை நாம் இந்த நேரத்தில் உற்று நோக்கிப் பார்க்க வேண்டும். ஆவியின் வரங்கள் வேண்டும் என்று நாற்பது நாள் ஜெபித்தாரா? என்று எனக்குத் தெரியாது. ஆனால், அற்புதங்கள் செய்ய தேவையான விசுவாசத்தில் நிறைந்திருந்தார் என்பது எனக்குத் தெரியும்.

எனவே, முதற்கண் நீங்கள் பரிசுத்த ஆவியில் நிறைந்திருத்தல் வேண்டும். அந்த ஆவியின் நிறைவைப் பெற்றவர்கள் விசுவாசத்தில் நிறைந்திருத்தல் வேண்டும்.

என்னஙக இது! குழப்புறீங்க! விசுவாசம் கர்த்தர்

தருவது என்கிறீர்கள். பின்னர் நான் எப்படி நிரம்புவது? அவர் அல்லவா என்னை நிரப்ப வேண்டும் என்று நீங்கள் கேட்கலாம். அதற்கு விடைதர நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

**விசுவாசம்** தேவனால் நமக்கு கிருபையாக வழங்கப்படுவது உண்மைதான். அதில் ஏதும் மாறுதல் இல்லை. ஆனால், **அந்த விசுவாசத்தை வளர்த்துக் கொள்வதும், வறள வைப்பதும் உங்கள் கையில் தான் இருக்கிறது** என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆபிரகாம் விசுவாசத்தில் வல்லவனானான் என்ற வசனத்தை மீண்டும் உங்களுக்கு நினைவுப்படுத்த விரும்புகிறேன்.

**நற்சாட்சியால் நிறைந்தவன்**

பரிசுத்த ஆவியின் நிறைவு பெற்ற மனிதனின் வாழ்வு முற்றிலும் மாற்றப்பட்டதாயும், மகிமையின் ஒளி வீசுவதாயும் அமைந்திருக்கும் என்பதற்கு பல்வேறு சாட்சிகள் வேதத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

பரிசுத்த ஆவி வரும்போது நாம் ஞானத்தால் நிறைக்கப்படுவதோடு வீரிய விசுவாசத்தாலும் நிறைக்கப்படுகிறோம் என்பது மாத்திரமல்ல அப்போஸ்தலருடைய நடபடிகள் 1:8 ல் குறிப்பிட்டுள்ளபடி பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்று இயேசு மொழிந்த அனுபவம் அதி உன்னதமானது.

**பரிசுத்த ஆவியைப் பெற்ற ஒவ்வொரு மனிதரும் இயேசுவுக்குச் சாட்சிகளாய் மாறுகிறார்கள். அதே வேளையில் ஆவியின் நிறைவைப் பெற்றவர்கள் கிறிஸ்தவ வாழ்வில் நற்சாட்சி பெற்றவர்களாயிருக் கிறார்கள்.**

இப்போது ஸ்தேவானின் தனித்தன்மையை சற்று



கவனித்துப்பாருங்கள். ஆதித் திருச்சபையில் நற்சாட்சி பெற்றவர்களில் ஒருவராக அவர் திகழ்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

நன்றாய் கவனியுங்கள். பரிசுத்த ஆவியின் நிறைவினால் அந்நிய பாஷை பேசுவதல்ல, நற்சாட்சியுடன் வாழ்வதே மேன்மையும், கர்த்தருக்கு மகிமையுமாய் இருக்கிறது. இன்று அநேகர் ஆவியைப் பெற்றிருக்கிறார்கள். ஜெபக்கூட்டங்கள், ஆராதனைகள் ஆகியவற்றில் தாங்கள் ஆவியில் நிறைந்துள்ளோம் என்பதை இவர்கள் எப்படியெல்லாம் காண்பிக்கிறார்கள் தெரியுமா?

அந்நிய பாஷையில் பேசுதல், ஆவியில் நிறைந்து ஆடிப்பாடுதல், இவைகளையும் தாண்டி ஆவியில் சிரித்தல், ஆவியில் கீழே விழுதல் என்றெல்லாம் ஒரு படி மேலே போய், தற்போது அதையும் தாண்டி புதுப்புது அனுபவங்களை ஆவிக்குரிய உலகிற்கு அறிமுகம் செய்து வைக்கிறார்கள்.

நன்றாய் கவனியுங்கள். ஆவியின் நிறைவின் வெளிப்பாடு மேற்கூறியவைகள் அல்ல. மாறாக, எல்லா மனிதர்களுக்கு முன்பாகவும் நற்சாட்சி பெறுதலே ஆகும்.

மேலே நான் குறிப்பிட்ட அனுபவங்களில் ஏதாவது உங்களுக்கு இருக்குமானால், நான் இப்படி எழுதியிருக்கிறதற்காக வருத்தப்பட வேண்டாம். அந்த அனுபவங்களுக்காக சந்தோஷப்படுங்கள். ஆனால், தனியாக உட்கார்ந்து நான் தொடர்ந்து எழுதுவதைக் குறித்து சற்று யோசித்துப் பாருங்கள்.

அந்நிய பாஷையில் பேசுகிறவன் தனக்கே பக்தி விருத்தி உண்டாகும்படி பேசுகிறான்.

அந்நிய பாஷையில் பேசுகிறவன் தேவனிடம் இரகசியங்களைப் பேசுகிறான்.

அந்நிய பாஷையில் பேசுகிறவன் ஆவியில்

விண்ணப்பம் பண்ணுகிறான்.

என்றெல்லாம் வசனத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

இப்படியிருக்க, ஆவியில் சிரிப்பதும், ஆவியில் விழுவதும் எதற்கு? அந்த அனுபவங்களினாலே, உங்களுக்கே பக்தி விருத்தி வருகிறதா? அல்லது அடுத்தவர்களுக்கு பக்தி விருத்தி வருகிறதா?

அப்படி பக்தி விருத்தி உங்களுக்கு உண்டாகிறது என்ற தெளிவு இருக்குமானால், அந்த அனுபவங்களில் நீங்கள் தாராளமாக நிற்கலாம் , ஓடலாம். அப்படி இல்லையென்றால், அவைகளை தாராளமாக தவிர்க்கலாம். ஆவியானவர் தண்டிக்கமாட்டார்.

நான் இங்கு முக்கியப்படுத்தி உங்களுக்குச் சொல்ல விரும்புவது என்னவென்றால், ஆவியின் நிறைவைப் பெற்ற மனிதன், ஸ்தேவானைப் போல கிறிஸ்தவ ஜீவியத்துக்குரிய நற்சாட்சி பெற்றவனாயிருக்க வேண்டும்.

பெரிய சபையில் ஸ்தேவானை எழுப்பி, நிற்க வைத்து பொறுப்பைக் கொடுத்தார்கள். மக்கள் அதை வரவேற்றார்கள். சபையாரின் முறுமுறுப்பு அடங்கியது. ஆனால், இன்றைய நிலை என்ன? சிலரிடத்தில் பொறுப்பைக் கொடுத்தால், சும்மாயிருக்கிற சபை முறுமுறுக்க ஆரம்பிக்கிறது. சில வேளைகளில் இரண்டாகவும் பிரிகிறது. காரணம் அந்த நபரின் சாட்சியற்ற தன்மையே.

அப்போஸ்தலனாகிய யோவான் எழுதின மூன்றாம் நிருபத்தில் (வ.21) தேமேத்திரியு 1. **எல்லோராலும்** நற்சாட்சி பெற்றதுமல்லாமல், 2. சத்தியத்தாலும் நற்சாட்சி பெற்றவன், 3. **நாங்களும்** (ஊழியர்களும்) சாட்சி கொடுக்கிறோம். எங்கள் சாட்சி மெய்யென்று அறிவீர்கள் என்று எழுதுகிறார்.

ஸ்தேவானை விட்டு விட்டு தேமேத்திரியுக்கு வந்து



விட்டேன் என்று எண்ணாதீர்கள். ஒரு ஆவிக்குரிய மனிதன் தான் பெற வேண்டிய நற்சாட்சிக்கு தேவையான மூன்று பக்கங்களை உங்களுக்கு மேற்கோள்காட்டும்படியே அந்த வசனத்தை எழுதியுள்ளேன்.

நீங்கள் ஸ்தேவானைப் போல உயர்த்தப்பட வேண்டுமா? உபயோகப்படுத்தப்படவேண்டுமா? முதற்கண் ஆவியின் நிறைவில் நிலைத்திருங்கள். அந்த ஆவியின் நிறைவின் வெளிப்பாடாய் எப்பக்கத்திலும் நற்சாட்சி பெற உங்களைத் தகுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

**எல்லோராலும் சாட்சி** என்பது சபையார் யாவரிடத்திலும் நமக்குச் சாட்சியிருத்தல் அவசியம். நீங்கள் சபை நடுவே எழும்பி நிற்கும்போது, இவனா? இவளா? என்று யாராகிலும் முறுமுறுக்கத் துவங்குவார்களாகில், அந்த இடத்திலிருக்கிற ஒரு மனதின் ஆவியின் கட்டு அறுந்து போகிறது. அதற்குப் பிறகு நீங்கள் என்னதான் தேவதூதனைப் போல பேசினாலும், நடந்து கொண்டாலும் அங்கே விடுதலையோ, தெய்வீகக் கிரியையோ உங்களால் காண முடியாது.

ஒரு மூத்தப்போதகர் ஒருவர் எனக்குக் கற்றுத் தந்த பாடங்களில், ஒரு காரியத்தை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எலிசா தீர்க்கதரிசியும், அவனுடைய வேலைக்காரனும் சூனேம் ஊருக்குச் சென்ற போது, கனம் பொருந்திய ஒரு ஸ்திரீயின் வீட்டில் தங்கினார்கள். (2. இராஜாக்கள் 4–ம் அதிகாரம்) இந்தச் சம்பவம் உங்களுக்கு நன்றாகவே தெரியும் என நம்புகிறேன்.

எலிசா அவளை அழைத்து, உனக்கு என்ன வேண்டும்? என்று கேயாசியை விட்டு கேட்டான். அவளோ ஏதுமில்லை என்று சொல்லி விட்டாள். அவள் போன பின்பு எலிசா மீண்டும் கேயாசியைக் கேட்கிறான். கேயாசி அவளுக்குக் குழந்தை இல்லை. அவள் புருஷனுக்கு

வயசாகிவிட்டது என்று வரலாற்றையே ஒப்புவித்து விட்டான் (இங்கதான் விஷயமே இருக்கு)

சிறிது காலத்திற்குப் பிறகு குழந்தை இறந்து விட்டது. அந்த ஸ்திரீ எலிசாவினிடத்தில் வந்தாள். எலிசா சங்கதியைக் கேட்டு தன் கோலை எடுத்து கேயாசியிடம் கொடுத்து அந்தப்பிள்ளையின் மேல் வைக்கச் சொன்னான். ஆனால், பிள்ளையின் தாயோ, கேயாசியும் வேண்டாம்; உங்கள் தடியும் வேண்டாம்; நீங்கள் தான் வரவேண்டும் என்று அடம்பிடித்து அழைத்துச் சென்றாள். பிள்ளையையும் உயிரோடே திரும்ப பெற்றாள்.

இந்தச் சம்பவத்தைக் குறித்து, அந்தப் பெரிய போதகர் சொன்னது என்ன தெரியுமா? அந்த ஸ்திரீ கேயாசியை நம்பவில்லை. அவன் வந்தால் பிள்ளை பிழைக்காது என்று தெரிந்திருந்தாள். காரணம், கேயாசி தன் சாட்சியை அந்த ஸ்திரீயிடத்தில் கெடுத்துக் கொண்டிருந்தான்.

எலிசாவும், கேயாசியும் அந்த வீட்டிற்கு ஒரே சமயத்தில்தான் சென்றார்கள். ஆனால், அந்த ஸ்திரீக்கு என்ன தேவை என்று எலிசாவுக்குத் தெரியவில்லை. கேயாசி அனைத்தையும் தெரிந்திருந்தான். அதற்குக் காரணம் அவனுக்கு நேரங்கிடைக்கும் போதெல்லாம் கதை அளந்து கொண்டிருந்திருக்கிறான் (விஷயத்தைப் புரிந்து கொண்டிருப்பீர்களென நினைக்கிறேன்)

அந்த ஸ்திரீயைக் குறித்து கேயாசி எவ்வளவு அறிந்து வைத்திருந்தானோ, அந்த அளவிற்கு அந்த ஸ்திரீ கேயாசியைக் குறித்தும் அறிந்திருந்தாள். ஆகாத சம்பாஷணைகள் நல்லொழுக்கத்தைக் கெடுக்கும். நற்சாட்சியைக் கெடுக்கும்.

எனவே, சபையார் முன்பு பேச்சிலும், கற்பிலும் பரிசுத்தவான் என்ற நற்சாட்சி பெற்றிருக்க வேண்டும். அப்படிப்பட்டவர்கள் எழும்புகிறபொழுதே சபையில் எழுப்புதல்



தோன்றும். அற்புதங்கள் நடக்கும். முறுமுறுப்புகள் அடங்கும்.

**இரண்டாவதாக**, சத்தியத்தால் (வசனத்தால்) சாட்சி பெற்றிருக்க வேண்டும். அதாவது, உங்கள் குடும்பம், உங்கள் வஸ்திரம், உங்கள் அலங்காரம் அனைத்துமே வசனத்தின்படி இருக்க வேண்டும். வசதிக்கேற்ப வாழ்பவர்கள் அல்ல, வசனத்திற்கேற்ப வாழ்பவர்களே இன்றைய சபையின் தேவை. நாம் செய்கிற ஒவ்வொரு காரியத்திற்கும் வசன அடிப்படை இருக்க வேண்டும். அப்படியில்லாத வாழ்வு சாட்சி கெட்ட வாழ்வு.

அப்போஸ்தலனாகிய பவுல், பிலிப்பியருக்கு எழுதும் போது **“ஜீவ வசனத்தைப் பிடித்துக்கொண்டு உலகத்திலே சுடர்களைப் போலப் பிரகாசிக்கிற நீங்கள்”** என்று எழுதுகிறார் (பிலிப் 2:14) எனவே, ஆவிக்குரிய பிரகாசமுள்ள வாழ்விற்கு திருவசனத்தின்படி சகலத்தையும் செய்யுங்கள்.

ஆணானாலும், பெண்ணானாலும் பூ வைத்துக்கொள்வதிலே எனக்கு உடன்பாடு கிடையாது. அதற்குக் காரணம், பெந்தெ கொஸ்தே உபதேசம் அல்ல. திருவசனத்தில் நான் எங்கு தேடியும் மனிதர்கள் பூ சூடிக் கொண்டதாக கண்டு பிடிக்க முடியவில்லை. வசன ஆதாரம் இல்லாத எந்த ஒன்றும் கிறிஸ்தவ வாழ்விற்கு அவசியம் இல்லை என்பதே எனது கருத்து.

என் இனிய நண்பர் ஒருவர் சொன்னார், இயேசு சாரோனின் ரோஜா, பள்ளத்தாக்கின் லீலி. எனவே, அதன் அடையாளமாக தலையில் பூ சூடிக் கொள்வதில் தவறு ஏதுமில்லை என்றார். நான் அவரைப் பார்த்து; சூப்பர் விளக்கம். இயேசு பெண்களுக்கு மாத்திரமா சாரோனின் ரோஜா. ஆண்களுக்கும் தான் அவர் ரோஜா. எனவே, நீங்களும் ஒரு ஆறு முழம் பூவை வாங்கி தினமும் அலங்கரித்துக் கொள்ளுங்கள் – என்றேன். மனுஷன்

வாழ்க்கையையே வெறுத்து விட்டார்.

நான் அத்தோடு அவரை விட்டுவிடவில்லை. இயேசு சாரோனின் ரோஜா மாத்திரமல்ல. உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்த்த தேவ ஆட்டுக்குட்டி. எனவே, ஆட்டுக்குட்டிக்கு ஏதாவது திட்டம் வைத்திருக்கிறீர்களா? என்று கேட்டேன். நண்பர் நடையைக் கட்டிவிட்டார்.

பிரியமானவர்களே! இந்தக் கருத்து உங்களின் உள்ளத்தை நெருடச் செய்யலாம். ஆனால், உண்மை இதுதான். இன்றைக்கு அநேகர் தங்கள் விருப்பம் போல் வாழ்ந்து கொண்டு, தங்களுக்குச் சாதகமாயிருக்கிற சில வசனங்களை மேற்கோள்காட்டி மக்களை திசை திருப்புகிறார்கள். இது மாபெரும் தவறு. வசனத்தின்படி தான் நாம் வாழ வேண்டுமே தவிர, சாதக வசனங்களைத் தேடி சேதம் அடையாதீர்கள். ஸ்தேவான் சத்தியத்தினால் நற்சாட்சி பெற்ற உத்தம சகோதரனாய் – சீஷனாய் இருந்தார்.

**மூன்றாவதாக** ஊழியர்களிடத்தில் நமக்கு நற்சாட்சி இருக்க வேண்டும். அப்போஸ்தலர் 4–ம் அதிகாரத்தில் யோசே என்கிற மனுஷன் இருந்தான். அவனைக் குறித்து எழுதுகிறபோது ஆவியானவர், **“அப்போஸ்தலர்களாலே ஆறுதலின் மகன் என்று பெயரிடப்பட்ட பர்னபா”** என்று குறிப்பிடுகிறார்.

மேலும் பவுல் பிலேமோனுக்கு எழுதுகிற போது, சகோதரனே பரிசுத்தவான்களுடைய உள்ளங்கள் உம்மாலே இளைப்பாறினபடியால், உம்முடைய அன்பினாலே மிகுந்த சந்தோஷமும், ஆறுதலுமடைந்திருக்கிறோம்'' (வ.7) என்று எழுதுகிறார்.

ஆக, அக்காலத்திலிருந்த சீஷர்கள் அப்போஸ்தலரிடத்தில் சாட்சி பெற்றிருந்தார்கள். நீங்களும் உங்கள் ஊழியரிடத்தில் சாட்சி பெற்றவர்களாயிருத்தல் வேண்டும்.



எனக்கு மிகவும் அன்பானவர்களே! உங்கள் ஊரிலுள்ள மற்றப் போதகர்கள் உங்களை மெச்சிக் கொள்ளலாம். பாடவும், செய்தியளிக்கவும் அழைக்கலாம். வாய்ப்பு அளிக்கலாம். அவைகளால் நீங்கள் சிறந்தவர்களாகிவிட முடியாது. முதற்கண் உங்கள் போதகரிடத்தில் **என் இதயத்தை இளைப்பாறப்பண்ணுகிறவர்** என்கிற சாட்சி பெற்றிடல் வேண்டும்.

லாமேக்கு, என்னைத் தேற்றுவான் என்று அர்த்தங்கொள்ளும்படி தன் மகனுக்கு நோவா என்று பெயரிட்டான். நோவா என்றால், இளைப்பாறுதல் என்று அர்த்தம். நீங்கள் உங்கள் போதகருக்கு நோவாக இருக்கிறீர்களா? நோவாவாக இருக்கிறீர்களா சற்று ஆராய்ந்து பாருங்கள்.

ஸ்தேவான், அப்போஸ்தலர்களால் சாட்சி பெற்றிருந்தார். உங்களுக்கும் அந்த சாட்சி வேண்டும். அந்த சாட்சி எப்போது கிட்டும் தெரியுமா? ஆவியைப் பெறுகிறதினாலல்ல, ஆவியினால் நிறைந்திருக்கும்போது மாத்திரம் கிட்டும்.

ஆவியில் நிறைந்திருக்கிற மனிதன், ஞானத்தால் நிறைக்கப்படுகிறான். விசுவாசத்தினால் நிறைக்கப் படுகிறான். நற்சாட்சியால் நிறைக்கப்படுகிறான் என்பதற்கு கோதுமை மணியாகிய ஸ்தேவான் முதன்மையும் முழுமையான சாட்சியுமாய் நமக்கு முன் ஜொலிக்கிறார்.

# 5

# ஆகமங்களில் தேறின ஸ்தேவான்

அப்போஸ்தலருடைய நடபடிகள் ஆறாம் அதிகாரத்தில் ஸ்தேவான் அறிமுகம் செய்து வைக்கப்படும் போது, ஒரு இளம் சீஷனாகவே அறிமுகம் செய்து வைக்கப்படுகிறார். கிரேக்க மொழி பேசும் யூதர் கூட்டத்தைச் சார்ந்தவர் என்ற குறிப்பைத் தவிர, வேறு எந்த குறிப்பையும் அவரைக் குறித்து நடபடிகளில் எழுதப்படவில்லை.

ஆனால், அவரது அனுபவங்களை அலசிப் பார்க்கும் போது மிக ஆழமான அஸ்திபாரமுள்ள ஆகமங்களைக் குறித்த அறிவு அவருக்குள் புதைந்திருக்கிறதை காண்கிற பொழுது மிகுந்த ஆச்சரியம் நமக்கு ஏற்படுகிறது.

ஸ்தேவானுடைய ஊழியம் வெற்றியுள்ள ஊழியமா? இல்லையா? என்கிற ஆழ்நிலை ஆராய்ச்சிக்கு இப்பொழுது நான் இறங்கவில்லை. ஆனால், ஆலோசனை சங்கத்தில் அமர்ந்திருந்த அத்தனை பேருக்கும், ‘‘ஆபிரகாமைத் துவக்கி, ஆவியானவர் வரைக்கும் மிக நீண்ட – தெளிவான – அதிகாரமுள்ள அற்புதமான பிரசங்கத்தை நிகழ்த்தியிருப்பது மிகச் சிறந்த சாதனை.

பிரியமானவர்களே! பன்னிரெண்டு அப்போஸ்தலர்களைக் கொண்டு தமது ஊழியத்திட்ட வரைவை உண்டாக்கிய இயேசு, மிகக் குறுகிய காலக் கட்டத்தில் யூத மார்க்கத்தை கலக்கும் வகையில் தமது சபையைக் கட்டியெழுப்ப முடிந்தமைக்கு காரணம் இயேசு கிறிஸ்து எப்படி ஆகமங்களில் தேறியிருந்தாரோ, அப்படியே அவருடைய சீஷர்களும் தேறியிருந்ததே.

ஆரம்ப காலத்தில் ஆதித்திருச்சபை யூதர்கள்



மத்தியில் தான் ஸ்தாபிக்கப்பட்டது என்பது உண்மை. ஆனால், யூதர்கள் கிறிஸ்துவை தெய்வக் குற்றம் செய்கிறவர் என்று குற்றம் சாட்டினபோது இயேசு கிறிஸ்துவானவர் தமது சொந்தத்திலிருந்து விளக்கங்கள் கொடுக்காமல், யூதர்களின் ஆகமங்களில் சொல்லப்பட்ட தீர்க்கதரிசன வசனங்களின் படியே விளக்கம் அளித்தபடியினால், அவர் வாழ்ந்த காலத்திலேயே எண்ணற்ற மக்களை தம் பக்கம் இழுத்து தாம் தான் மேசியா என்பதை உணரும்படிச் செய்தார்.

இயேசு கிறிஸ்து பின்பற்றின அதே மாதிரியைத்தான் அப்போஸ்தலர்கள் பின்பற்றினார்கள். இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்தபின்பு எம்மாவூருக்குச் சென்ற சீஷர்களுக்கும் மோசே முதலிய சகல தீர்க்கதரிசிகளும் எழுதின வேத வாக்கியங்களை விவரித்துக் காண்பித்து அவர்கள் விழிகளை திறக்கச் செய்தார் (லூக் 24:27)

இயேசுவுக்குப் பின் இந்த நிலையை அப்போஸ்தலர்கள் பின்பற்றாமற் போயிருந்தால் கிறிஸ்தவம் சிசுமரணம் எய்திருக்கும். ஆனால், இயேசுவைப் போலவே இவர்களும் ஆகமங்களில் தேர்ச்சி பெற்று, அவைகளின் படியே போதித்தபடியால், அநேகரை ஆண்டவருக்குள் இழுத்துக் கொண்டார்கள்.

நடபடிகள் முதல் அதிகாரத்திலேயே யூதாசின் மரணத்திற்கும் சங்கீதப்புஸ்தகத்தில் சொல்லப்பட்ட வசனத்திற்கும் உள்ள தொடர்பை பேதுரு விளக்கிக்காட்டி, புதிய அப்போஸ்தலரைத் தேர்ந்தெடுத்தார். இரண்டாம் அதிகாரத்தில், பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்பட்டபொழுது அந்நிகழ்ச்சிக்கும் யோவேல் தீர்க்க தரிசனத்திற்கும் உள்ள தொடர்பை விவரித்துக் காண்பித்து, பிரசங்கித்து மூவாயிரம் பேருக்கு ஸ்நானம் கொடுத்தார். மூன்றாம் அதிகாரத்திலே (18ம் வசனத்தில்) தேவன் தம்முடைய தீர்க்கதரிசிகள் எல்லாருடைய வாக்கினாலும் முன்னறிவித்தவைகளை இவ்விதமாய் நிறைவேற்றினார் என்று ஆரம்பித்து,

மோசேக்கும், கிறிஸ்துவுக்கும் உள்ள தொடர்பை விவரித்துக் காண்பித்தார்.

இப்படி தொடர்ந்து, கிறிஸ்துவை அவர்கள் ஆகமங்களிலிருந்தும், தீர்க்கதரிசனங்களிலிருந்தும், சங்கீதங்களிலிருந்தும் மேற்கோள் காட்டி பிரசங்கித்ததினால், எதிர்ப்போரும், மறுப்பேதும் சொல்லாமல் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டார்கள். கிறிஸ்தவம் வளர்ந்தது.

பிரியமானவர்களே! இங்கே ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும். சாதுரிய பிரசங்கத்தினால் சாதனை படைத்துவிட முடியாது. வேத வசனமே தேவன் விரும்புவதை செய்து முடிக்கும். மிகக்குறுகிய காலத்தில், ஸ்தேவான் ஊழியம் வளர்ந்ததற்கு காரணம், அற்புத—அடையாளங்கள் நிகழ்த்தியதற்குக் காரணம், அவர் வேத வசனத்தில் நிறைந்திருந்தார் – தேறினவராய் இருந்தார்.

கிறிஸ்துவினிடத்தில் சாத்தான் சோதிக்க வந்த போது, அவர் வரத்தைப் பயன்படுத்தவில்லை. மாறாக, வசனத்தைப் பயன்படுத்தினார். அதனால், மும்முறையும் வெற்றிகண்டு, சாத்தானை வீழ்த்தினார்.

இன்றைக்கு அநேக ஊழியர்கள் வீழ்ந்து போவதற்கு காரணம் வேத வசனத்தைப் பேசுவதற்குப் பதிலாக, தங்களின் வீர வசனத்தைப் பேசுவதே. ஸ்தேவானோ ஆவியில் நிறைந்தவராய் தேவ வசனத்தைப் பேசினபடியால், தர்க்கம் செய்யவந்தவர்களும் எதிர்த்து நிற்கக்கூடாமல், அடங்கிப் போனார்கள்.

கடந்த அத்தியாயத்தில், ஸ்தேவானுடைய ஞானத்திற்குக் காரணம், ஆவியின் நிறைவு என்று கண்டோம். அது உண்மை தான். அதே வேளையில் அந்த ஞானத்திற்கு மற்றும் ஒரு காரணம் உண்டு. அது வேத வசனம் ஆகும்.

வேத வசனம் பேதையை ஞானியாக்கி, புத்தியைத் தெளிவுள்ளதாக்கி எப்பக்கத்திலும் நம்மை வெற்றிப்



பாதைக்குள் நடத்துகிறது என்பதை சங்கீதப் புஸ்தகத்தில் ஆவியானவர் பதித்து வைத்திருக்கிறார்.

அற்புதங்கள், அடையாளங்கள் செய்ய ஆவியின் நிறைவு எவ்வளவு அவசியமோ, அந்த அளவிற்கு ஆகமங்களைக் குறித்த அறிவு நமக்கு அவசியம் இருக்க வேண்டும். ஏனென்றால், வேதத்தில் சொல்லப்பட்டவைகளனைத்தும் வாக்குத்தத்தங்கள். அந்த வாக்குத்தத்தங்களை சொல்லும்பொழுதும், சொல்லி ஜெபிக்கும் பொழுதும் அற்புதங்களும், அடையாளங்களும் நிகழ்கிறது.

தேவன் தமது சகல பிரஸ்தாபத்தைப் பார்க்கிலும் தமது வார்த்தையை மகிமைப்படுத்தியிருக்கிறார் என்று வேதம் சொல்லுகிறது. எனவே, ஸ்தேவானுடைய அற்புத ஊழியத்திற்கு அஸ்திபாரம் ஆவியின் நிறைவு மாத்திரமல்ல, ஆகமங்களைக் குறித்த அறிவும் ஒரு காரணம்.

ஸ்தேவான் வேத வசனத்தை பகுத்து – வகுத்து கற்றறிந்திருந்தார் என்பதற்கு அப்போஸ்தலர் ஏழாம் அதிகாரம் நல்ல சாட்சியாயிருக்கிறது. சம்பவங்களை சரித்திர குறிப்புகளோடு அவர் சரியாய் அறிந்திருந்தார்.

இப்படிப்பட்ட அறிவு இன்றைய பிரசங்கிமார்களுக்கு மிகவும் அவசியம். சகேயு கதையும், பர்திமேயு கதையும் வைத்துக்கொண்டு அநேகர் காலத்தை ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

அப்போஸ்தலனாகிய பவுல், பேதுருக்கு எழுதின இரண்டாம் நிருபம் என்று அப்பட்டமாக பேசுகிற பிரசங்கியார்களும் உண்டு. தலைப்பையே தலை கீழாக்குகிறவர்கள் பிரசங்கத்தில் என்ன செய்வார்கள் என்பதை நீங்களே யோசித்து முடிவு செய்யுங்கள்.

மகதலேனா மரியாளுக்கும், கிலெயோப்பா மரியாளுக்கும், இயேசுவின் தாயாகிய மரியாளுக்கும், மாற்குவின் தாயாகிய மரியாளுக்கும், பாதத்தில்

அமர்ந்திருந்த மரியாளுக்கும், தைலம் பூசிய மரியாளுக்கும் வித்தியாசம் தெரியாமல் ஒரு அவியல் பிரசங்கம் தயாரித்து மக்களையும் குழப்பி, தாங்களும் குழம்பிப் போகிறார்கள்.

யானையைத் தடவிப் பார்த்த நான்கு குருடர்களைப் போல சிலர் இன்றைக்கு வேதப் புஸ்தகத்தில் அங்குமிங்குமாக தொட்டுப்பார்த்து விட்டு ஒரு முடிவுக்கு வந்து பிரசங்கிப்பதினால் தான் புதுப்புது உபதேசங்களும், புதுப்புது குழப்பங்களும் திருச்சபையில் புகுந்து விளையாடிக் கொண்டிருக்கிறது.

குறைந்தபட்சம் ஆதியாகமத்திலிருந்து வெளிப்படுத்தின விசேஷம் வரைக்கும் ஐந்து முறையாகிலும் படித்து முடித்த பிறகு தான் முதல் பிரசங்கத்தையே ஆரம்பிக்க வேண்டும் என்பது என்னுடைய தாழ்மையான கருத்து. நான் பதினைந்து முறை முதல் அட்டை முதல் கடைசி வரைக்கும் அறுபத்தாறு ஆகமங்களையும் வாசித்து முடித்த பிறகு முதல் பிரசங்கத்தைத் துவக்கினேன்.

அதுவும் அன்று, மாலைக்கூட்டம். நல்லமழை, மின்சாரம் இல்லை. எத்தனை பேர்கள் வந்திருப்பார்கள் என்பதை உங்கள் ஊர் சபையை வைத்துக் கணக்கிட்டுக் கொள்ளுங்கள். ஆனால் அந்த ஆராதனை எனக்கு உரைக்கல்லாக இருந்தது.

புதிய வேகம் எனக்கு கிடைத்தது. புதிய தாகம் பிறந்தது. வேதத்தை இன்னும் படிக்கிறேன். வேதப் புஸ்தகம் எனக்கு பழையதாகப் போய்விட்டது. ஆனால், வேத வசனங்கள் இன்றும் எனக்குப் புதியதாகவே இருக்கிறது.

ஸ்தேவானைக் கவனித்துப் பாருங்கள்! தெளிவாக கோர்வையாக – ஒரு நீண்ட வரலாற்றை சொல்லுகிறார். இதிலே அப்போஸ்தலர் 7:14ல் எகிப்துக்குச் சென்றவர்கள் எழுபத்தைந்துபேர் என்று எழுதியிருக்கிறது. ஆதியாகமம் 46:27 ல் எழுபது பேர் என்று எழுதியிருக்கிறது. இதை வைத்துக் கொண்டு சிலர் குழப்புகிறார்கள். ஆகமங்களில்



தேறின ஸ்தேவான் தவறு இழைத்துவிட்டாரா? என்ற கேள்வி உங்களுக்கும் எழலாம். எழுபது எப்படி எழுபத்தைந்தாக மாறியது என்பதை உங்களுக்கு விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பழைய ஏற்பாட்டில் ஆதியாகமம் முதல் மல்கியாவரைக்குமுள்ள அனைத்து புத்தகங்களும் எபிரெய மொழியில் தான் எழுதப்பட்டிருந்தது. அதைத்தான் யூதர்கள் பயன்படுத்தினார்கள். கிறிஸ்துவுக்கு முன் ஏறக்குறைய 270 ஆண்டுகளுக்கு முன்பாக (300 BC ) கிரேக்க சாம்ராஜ்யம் வலுகொண்ட கால கட்டத்தில் இந்த பழைய ஏற்பாடு எபிரெய மொழியிலிருந்து கிரேக்க மொழியாக்கம் செய்யப்பட்டது.

இப்படி நீண்ட காலத்திற்குப் பிறகு மொழி பெயர்க்கப்பட்ட இந்த ஜெப்தவஜிந்து என்கின்ற கிரேக்க மொழி பெயர்ப்பில் யாக்கோபின் குடும்பத்தை எண்ணிக்கையிடும் போது யோசேப்பின் குமாரர்களாகிய எப்பிராயீம், மனாசே ஆகியோரின் மூன்று மகன்கள், இரண்டு பேரன்கள் ஆகிய ஐந்து பேர்களின் பெயர்கள் இணைக்கப்பட்டது.

ஸ்தேவான் கிரேக்க யூதனாக இருந்து கிரேக்க மொழி வேதத்தில் தேர்ச்சி பெற்றிருந்ததினால் அதை ஆதாரமாக வைத்துப் பிரசங்கித்தார். ஆகவே, அது பிழை, இல்லை, வரலாற்றுக் கூடுதல் குறிப்பு என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

மிகத்தெளிவான இப்படிப்பட்ட வசன மேற்கோள்களை பவுலும் தனது ஊழியத்தில் கடைபிடித்ததினால், அவர் வாக்கிலே வல்லவராயிருந்து அநேகரை கிறிஸ்துவுக்குள் இழுத்தார்.

இன்றைய கிறிஸ்தவத்தின் அதிமுக்கிய தேவை அடுக்கு மொழி, மிடுக்கு நடை பிரசங்கிகள் அல்ல, வேத வசனத்தை சரியாய் அறிந்தும், புரிந்தும் இருக்கிற தேவ

தாசர்களே, ஸ்தேவானைப் போல வசனத்தை வகையாய் சொல்ல ஊருக்கு நாலுபேர் இருந்தால் போதும். இந்த நாநிலமே நாதன் இயேசுவுக்கு சொந்தமாகிவிடும்.

இந்த இடத்தில் பக்தனாகிய எஸ்றாவை நினைப்பூட்ட விரும்புகிறேன். அவரைக் குறித்து எஸ்றா புத்தகத்தில் ஆங்காங்கே ஆவியானவர் அழகுற எழுதி வைத்திருக்கிறார்.

எஸ்றாவோடு, ஒன்று கர்த்தருடைய கரம் அவர் மேலிருந்தது. மற்றொன்று கேட்டவைகளெல்லாம் இராஜா அவருக்குக் கொடுத்தார். (எஸ்றா 7:6)

அதாவது தேவனுடைய கிருபையும் இராஜாவுடைய தயவும் எஸ்றாவினிடத்தில் அதிகமாய்ப் பெருகி நின்றது. அதற்குக் காரணம் அந்த வசனத்தின் முற்பகுதியில் எழுதப்பட்டிருக்கிறது. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் அருளிய வேதத்தில் தேறின வேத பாரகனாயிருந்தான் என்பதே அஃது.

எந்த மனிதன் கர்த்தருடைய வசனத்தில் தேறினவனாக இருக்கிறானோ அவனோடு கூட கர்த்தருடைய கரம் கூட இருக்கும் என்பதற்கு எஸ்றா சாட்சியாயிருக்கிறார். புதிய ஏற்பாட்டில் ஸ்தேவான் மற்றொரு சாட்சியாய் விளங்குகிறார்.

தேறின வேதபாரகன் என்பது ஏதோ வேதத்தைப் படித்து முடித்து விடுகிறது அல்ல. அதற்கு மேல் மிக உன்னதமான ஒரு அனுபவம் இருக்கிறது. அதைக் குறித்து எஸ்றா 7:10ல் எழுதப்பட்டிருக்கிறது.

"கர்த்தருடைய வேதத்தை ஆராயவும், அதன்படிச் செய்யவும் எஸ்றா தன் இருதயத்தைப் பக்குவப்படுத்தியிருந்தான்."

நன்றாய் கவனியுங்கள்! முதலில் வேதத்தை ஆராய வேண்டும். இரண்டாவது அதன்படி தனது சொந்த வாழ்க்கையில் செய்ய இருதயத்தைப் பக்குவப்படுத்த



வேண்டும். அந்த மனிதனே வல்லமை நிறைந்த மனிதன். வாக்கு நிறைந்த மனிதன்.

ஸ்தேவான் தனது சொந்த வாழ்வில் வேதத்தை முக்கியப்படுத்தி, சொல்லும் செயலும் ஒன்று போல் இருக்கும்படி தன் வாழ்வை நடத்திச் சென்றதினால், அவர் எந்த இடத்திலும் வெட்கப்படவில்லை. மாறாக, அவர் முகம் பிரகாசித்தது.

பிரசங்கிமார்களுக்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நீங்கள் பிரசங்கிப்பதை நீங்களே செய்ய வேண்டும். அல்லாவிட்டால் நீங்கள் செய்வதை மற்றவர்கள் பிரசங்கிப்பார்கள். ஆம் சொல்லும் செயலும் ஒன்று போல் உள்ளவர்களின் வார்த்தையே மக்கள் மத்தியில் எடுபடும் என்பதை மறந்துவிடாதீர்கள்.

முதலில் வேதத்தை ஆராயுங்கள். அதன்படி வாழ அர்ப்பணியுங்கள். வேதத்தில் கற்றுத் தேர்ந்தவர்களாய் தெளிந்தவர்களாய் நில்லுங்கள். ஆவியின் ஒத்தாசையுடன் ஸ்தேவானைப் போல் சொல்லுங்கள். ஆத்துமாக்களை வெல்லுங்கள்.

# 6

# அற்புத வித்தாகிய ஸ்தேவான்

கிரீடம் என்னும் அர்த்தமுள்ள பெயர் கொண்ட இந்த ஸ்தேவானைக் குறித்து கடந்த ஐந்து அத்தியாயங்களில் பல்வேறு கருத்துக்களை நாம் படித்தோம். அழைக்கப்பட்டது ஒரு ஆச்சரியம். அவருக்குள் ஆவியின் வரங்கள் கிரியைகள் செய்தது மற்றுமொரு ஆச்சரியம். அவர் வாயிலிருந்து ஆகமங்கள் அருவிபோல் வெளி வந்ததே அதுவும் ஓர் ஆச்சரியம். இவைகள் எல்லாவற்றையும் விட அவருடைய வாழ்வின் இறுதி அத்தியாயம் மிகமிக ஆச்சரியம்.

அருளுரை ஆற்றிக்கொண்டிருக்கும் பொழுதே அவருக்கு விரோதமாய் அலெக்ஸாந்திரியா பட்டணம் முதல் ஆசியா தேசத்தார் வரை ஆத்திரம் கொண்டு எதிர்த்து நின்றார்கள். அந்தச் சூழ்நிலையில் ஸ்தேவான் நடந்து கொண்ட விதம் எண்ணிப் பார்க்க இயலாத ஒன்று.

ஒரு பிரசங்கியின் பிரசங்கத்தை அவர் முன்னாலேயே நான்கு பேர் எழும்பி நின்று விமர்சித்தால், அல்லது நான்கு பேரைக்கூட்டி வைத்துக்கொண்டு கண்டனம் தெரிவித்தால், அந்தப்பிரசங்கியின் முகம் எப்படியிருக்கும்? என்று யோசித்துப்பாருங்கள். எள்ளும், கொள்ளும் வெடிப்பது போல எரிச்சல் நிறைந்த முகமாகத் தான் இருக்கும்.

ஆனால், நியாயாசனத்திற்கு முன்பாக நிறுத்தப்பட்ட போது, ஸ்தேவானின் முகம் எப்படியிருந்தது தெரியுமா? **அவன் முகம் தேவ தூதன் முகம் போல் இருக்கக் கண்டார்கள்.** (அப் 6:15) என்று வேதம் எழுதப்பட்டுள்ளது.

முழு வேதாகமத்திலும் மூன்றே பேருடைய முகம் மாத்திரமே பிரகாசமடைந்து ஜொலித்ததாக பதிவு செய்யப்பட்டுள்ளது. லூக்கா 9:29ல் நம்முடைய



இரட்சகராகிய கிறிஸ்து இயேசு **ஜெபம் பண்ணிக் கொண்டிருக்கையில்** அவருடைய முகரூபம் மாறிற்று என்று எழுதப்பட்டுள்ளது. யாத்திராகமம் 34:29ல் சீனாய் மலையிலிருந்து இறங்குகிறபோது தேவன் அவனோடு பேசினதினாலே மோசேயின் முகம் பிரகாசம் வீசிற்று என்று எழுதப்பட்டுள்ளது.

இந்த இரண்டு பேரின் அனுபவங்களைக் கொஞ்சம் ஆராய்ந்து பாருங்கள். இயேசு தேவனுடன் பேசினபோது மறுரூபம் அடைந்தார். தேவன் மோசேயோடே பேசினதினால் பிரகாசமடைந்தான். ஆனால், மூன்றாம் நபராகிய ஸ்தேவானைக் கவனித்துப் பாருங்கள்! எல்லாரும் குற்றம் சொல்லுகிற போது அவர் முகம் தேவதூதன் முகத்தைப்போல் ஜொலித்தது.

எத்தனை மகிமை என்று யோசித்துப்பாருங்கள்!

தமிழில் ஒரு பழமொழி உண்டு. "அகத்தின் அழகு முகத்திலே தெரியும்" – என்பதே அஃது. ஸ்தேவானுடைய முகம் தேவதூதனுடைய முகத்தைப் போலிருந்தது என்பது புறத்தே மாத்திரமல்ல. அகத்தேயும் அவர் தேவ தூதனைப் போலவே மனம் புதிதாகிறதினாலே மறுரூபம் அடைந்திருந்தார் என்பதின் வெளிப்பாடாயிருக்கிறது.

ஆரம்ப அத்தியாயத்தில், "கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து செத்ததேயாகில், அது மிகுந்த பலனைத்தரும்" என்ற வசனத்தை மேற்கோள் காட்டி எழுதியிருந்தேன். **வீழ்கின்ற எல்லா கோதுமைகளும் விளைந்துவிடாது என்பதை நாம் மனதிற்கொள்ளவேண்டும். வீரிய வித்தாக வீழ்கின்ற கோதுமை முத்தே விளைச்சலைக் கொடுக்கும்.**

அந்த வகையில், இயேசுவின் நாமத்தை முன்னிட்டு எத்தனையோ பேர்கள் ஜீவனைக் கொடுத்து அழிந்து போனாலும், அவர்களில் பலர் முற்றின வித்தாக இல்லாதபடியினால், பூமியில் விளைச்சலை

உண்டாக்கவில்லை.

ஆனால் ஸ்தேவானோ இரத்த சாட்சியாய் மரித்தது மாத்திரமல்ல, முழுமையான வளர்ச்சி பெற்ற முதிர்ச்சி பெற்ற கோதுமை மணியாய் தன்னைக் காத்துக் கொண்டபடியினால், தான் வீழ்ந்த பின்னரும் விளைச்சல் தந்தார். அந்த சாகுபடியில் தான் சவுல் சபைக்கு வந்தார்.

பிரியமானவர்களே! ஊழியம் செய்வது வேறு. அற்புதங்கள் அடையாளங்கள் நிகழ்த்துவது வேறு, பரிசுத்தவான்களாய் வாழ்வது வேறு. ஊழியம் செய்வதினாலோ அல்லது அற்புத அடையாளங்கள் செய்வதினாலோ, நான் பரிசுத்தமாய் இருக்கிறேன் என்று நீங்கள் எண்ணி ஏமாந்து போய் விடக்கூடாது.

இயேசு கிறிஸ்து ஊழியம் செய்த நாட்களிலே "அந்நாட்களில் பிசாசுகளைத் துரத்தினோம், தீர்க்கதரிசினங்களை உரைத்தோம் என்று அநேகர் சொல்லுவார்கள். ஆனால், பிதாவின் சித்தம் செய்யாத அவர்களை நான் உங்களை அறியேன் என்று சொல்லி விடுவேன்" என இயேசு சொல்லியுள்ளார்.

எனவே, அற்புதங்கள், அடையாளங்கள், அருளுரைகள், இவைகளைத் தாண்டி நாம் அகத்தே மறுரூபமடைய வேண்டியது மிகவும் அவசியமாகும். நம்மை நிந்திப்பார்கள். நியாயாசனத்தில் நிறுத்துவார்கள். நிலைகுலையச் செய்யத் தக்கதாய் நீசத்தனமான குற்றச்சாட்டுகளைச் சுமத்துவார்கள். நம்மைப் பார்த்து பல்லைக் கடிப்பார்கள்.

இப்படிப்பட்ட சூழ்நிலையிலும் நான் ஒரு பரிசுத்தவான் என்ற நிலையை நமது முகம் வெளிப்படுத்த வேண்டும். ஸ்தேவானைப் பாருங்கள்! கிறிஸ்து இயேசுவைப் போலவே அவருடைய மரண காலம் இருந்திருக்கிறது.

ஒருவராலும் எடுக்க முடியாத தெய்வீகப் பிரசன்னம், தேவ சமாதானம் அவரை நிறைத்திருந்திருக்கிறது.



சகலத்தையும் தாங்குகிற, சகிக்கிற பூரணத்துவம் அவருக்குள் இருந்திருக்கிறது.

இப்படிப்பட்ட பூரணத்துவத்தின் நிலை நமக்குள் ஏற்பட வேண்டும். ஆனால், இன்றைய பரிசுத்தவான்களின் நிலை என்ன? "சுடுதண்ணியை காலில் ஊற்றிக் கொண்டது போல குதிக்கிறான் பாரு" என்ற சொல் வழக்கைப் போலவே எதற்கெடுத்தாலும் எகிறி குதிக்கிறார்கள். மனம் கொதிக்கிறார்கள். முடிவில் தேவ சமாதானத்தை இழக்கிறார்கள்.

இயேசுவே! ஸ்தேவானுக்குள்ளிருந்த அற்புதங்கள் செய்யும் ஆவியை விட அமைதலுள்ள ஆவியை எனக்குத்தாரும் என்று நாம் ஜெபிப்போம். நம்மைச் சுற்றி சூழ்ந்துள்ள எதிரிடையான சக்திகளை வெல்லுவதற்கு இப்போதைய தேவை அமைதலாய் ஆண்டவரைச் சார்ந்திருக்கும் ஆவி.

இவர்கள் நியாய – சங்கத்தில் நிறுத்தின பின்பும் ஸ்தேவானுடைய அணுகுமுறையைப் பாருங்கள்!

பிதாக்களே, சகோதரரே, என்று தனது வார்த்தைகளை மனம் பதறாமல் மனத்தாழ்மையோடு ஆரம்பிக்கிறார்.

கிறிஸ்து இயேசுவிலிருந்த தாழ்மையின் வெளிப்பாடு ஸ்தேவானில் வெளிப்பட்டது. அதனால்தான் விசாரிக்க வந்தவர்களும் விஷயம் என்னவென்பதை அறிந்து கொள்ளும்படி இந்த விசேஷ அருளுரையைக் கேட்டு அமர்ந்திருந்தார்கள்.

இந்த அணுகுமுறையை நாமும் கையாண்டால், நிச்சயம் கை மேல் பலனைக் காணமுடியும். நம்மை எதிர்க்க நினைப்பவர்களும் எதிரே அமர்ந்து சத்தியம் கேட்க ஆரம்பித்து விடுவார்கள்.

ஸ்தேவானின் சாதகமான காரியங்களை மேற்கோள்

காட்டி வந்த நான் ஒரு சிறிய பாதகமான காரியத்தையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். சகோதரரே, என்ற பிரசங்கத்தை ஆரம்பித்தபோது, அனைவரும் பிரசங்கத்தைக் கேட்க அமர்ந்திருந்தார்கள். ஸ்தேவானுக்கு என்ன ஆயிற்று என்றே தெரியவில்லை, வணங்காக் கழுத்துள்ளவர்களே, என்ற வார்த்தையை பயன்படுத்திவிட்டார்.

என்ன நடந்தது தெரியுமா? பிரசங்கத்தைக் கேட்க அமர்ந்திருந்தவர்கள் அவரை அடிப்பதற்காக எழுந்தார்கள். பிரசங்கிமார்களே! கவனம் தேவை. தடித்த வார்த்தைகளை தவறியும் பயன்படுத்தி விடக்கூடாது. அது பாதக விளைவை உங்களுக்கும், ஊழியத்திற்கும் கொண்டு வந்துவிடும்.

அன்றைய தினத்தில் அந்த வார்த்தைக்குப்பதிலாக மென்மையான வார்த்தையைப் பயன்படுத்தியிருந்தால், ஒரு வேளை அவருடைய மரணம் தள்ளிப் போடப்பட்டிருக்கலாம். கர்த்தருக்காக சாகிறேன் என்று முரண்டு பிடிக்காதீர்கள். கர்த்தருக்காக சாதிப்பதற்கு முயற்சி செய்யுங்கள். அதுவே சாலச்சிறந்தது.

விஷயத்திற்கு வருவோம். ஸ்தேவானைப் பார்த்து பல்லைக் கடிக்கிறார்கள். இவர் அவர்கள் பல்லைப் பார்க்கவில்லை. மாறாக, பரத்தைப் பார்த்தார். இதுதான் விசுவாச வாழ்வின் வெற்றி. மரணம் நெருங்குகிற வேளையில் மரண சூழ்நிலைகளையல்ல, மகிமையான இராஜ்ஜியத்தை எதிர்பார்த்து வரவேற்பதே கிறிஸ்தவ அனுபவம் ஆகும்.

அமைதலுள்ள ஆவி மாத்திரம் அல்ல. விண்ணப்பத்தின் ஆவியையும் ஸ்தேவானில் காண்கிறேன். சிலுவையில் இயேசு தம்மை அறைந்தவர்களுக்காக விண்ணப்பம் பண்ணினது போலவே, தன்னை அடித்தவர்களுக்காக ஸ்தேவான் விண்ணப்பம் பண்ணினதை எண்ணிப்பாருங்கள்.



ஆஹா! எத்துனை மகிமை! கிறிஸ்துவின் வளர்ச்சிக்குத்தக்க நிறைவான வளர்ச்சி இதுவன்றோ? ஆவியின் நிறைவு மாத்திரமல்ல. எந்த மனிதர்மேலும் கசப்பு இல்லாத இருதயம். கர்த்தரின் ஊழியத்திற்காக பானபலியாய் வார்க்கப்பட, தன்னைத்தானே தியாகம் செய்த ஒரு ஒப்பற்ற அனுபவம். இந்த அனுபவத்தை இரட்சகரிடம் இறைஞ்சுவோம்.

அப்போஸ்தலர் ஆறாம் அதிகாரத்தில் இளம் சீஷனாய் அறிமுகமாகிற இந்த ஸ்தேவான், ஏழாம் அதிகாரத்தில் இரும்பு மனிதராய் விசுவாசத்தில் நின்று கடைசி வசனங்களில் இயேசுவின் இருதயத்துக் கொத்தவராய் நிற்கின்ற காட்சியைப் பாருங்கள்.

அதோ! ஒரு கூட்டம் காதுகளை அடைத்துக்கொண்டு இவரைக் கொல்லுவதற்கு ஒருமனப்பட்டு, ஓங்கின கைகளில் கற்களை எடுத்துக்கொண்டு ஸ்தேவானை நோக்கி வருகிறது.

இதோ! இந்த கோதுமை மணியைப் பாருங்கள். ஆண்டவரே, ஆயிரக்கணக்கான மணிகள் எழும்ப என்னை கோதுமை மணியாய் ஒப்புக் கொடுக்கிறேன். என் ஆவியை ஏற்றுக் கொள்ளும் என்று சொல்லி தொழுது கொள்ளுகிறது.

அந்தோ! அந்தப் பாதகர்கள் கல்லால் அடிக்கிறார்கள். உலகத்தைக் கலக்கிய அந்தக்கோதுமை மணி நிலத்தில் விழுந்து செத்தது. தேவ பக்தியுள்ள மனுஷர் அதை விதைத்தார்கள். (அப் 8:2) அன்று முதல் அது மிகுந்த பலனைத் தர ஆரம்பித்தது. அதன் முதற்பலன் அப்போஸ்தலர் 9–ம் அதிகாரத்தில் வரும் சவுல் என்கிற பவுல்.

ஸ்தேவான் மரித்தும் வாழ்கிறார். இன்றைய இந்தியாவின் தேவை, திருச்சபையின் தேவை விசுவாசமுள்ள, ஆவியில் நிறைந்த, ஆகமங்கள் அறிந்த வித்தாய் தன்னை ஒப்புக் கொடுக்கும் ஸ்தேவான்களே.

அந்த நபராய் நீங்களும் இருக்கக் கூடாதா?
வாருங்கள் நானும் வருகிறேன்.
எத்தனை இன்னல்கள்
என் வாழ்வில் வந்தாலும்
உம்மைப் பிரியேன் ஐயா.
இரத்தமே சிந்தி சாட்சியாய் வாழ்வேன்
நிச்சயம் நிச்சயமே!



# விண்ணக அப்பம்

அன்பார்ந்தவர்களே,

போதகர். கிறிஸ்டோபர் அவர்களின் புத்தகங்கள் படிக்க இயலாதோருக்காகவும், பார்வையற்றவர்களுக்காகவும் ஆடியோ வடிவில் வெளியிடப்படுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. போதகர், கிறிஸ்டோர் அவர்களின் புத்தகங்கள் ஆடியோ வடிவில் விரைவில் கிடைக்கப் பெற உங்கள் ஜெபத்தினாலும், கரத்தினாலும் தாங்குங்கள்.

அலுவலக தொடர்பு எண் : 94888 56323

இப்படிக்கு,

**Pr. அலெக்ஸ் தினகரன்**